Koviloor Digital Library

சற்குரு துணை

அருளமுதம்



கவிஞர்

முருகனடிமை

இராம. இராமநாதன்

Acc.No: 32241
925 3-3

Koviloor Digital Library

உ

அருள்மிகு கற்பக விநாயகர்

யாம் இருக்கும் இடத்தில்
சகல செல்வங்களும்
கற்பக விருட் சமாய் வளரும்!

Koviloor Digital Library

3-3

சற்குரு துணை

அருளமுதம்

சிந்தனைக் கவிஞர் சித. சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில் –
பாரோர் படித்துப் பயனுற வழங்கு
இல்லம் முத்துப்பட்டினம்,

கவிஞர் முருகனடிமை
இராம. இராமநாதன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 32241

ஸ்ரீ ஷீர்டி பப்ளிகேஷன்ஸ்,
23, கற்பக விநாயகர் காலனி,
கோ. புதூர், மதுரை – 625 001.
போன் : 0452 – 2566842

Koviloor Digital Library

நூலின் பெயர்	:	அருளமுதம்
ஆசிரியர்	:	கவிஞர் முருகனடிமை இராம. இராமநாதன்
பொருள்	:	தெய்வீகப் பாடல்கள்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு ஜனவரி 2005 1000 பிரதிகள்
அளவு	:	1 x 8 கிரவுன்
பக்கம்	:	78
விலை	:	Rs. 20/-
பதிப்புரிமை	:	ஸ்ரீ ஷீர்டி பப்ளிகேஷன்ஸ்©
பதிப்பகத்தார்	:	ஸ்ரீ ஷீர்டி பப்ளிகேஷன்ஸ், 23, கற்பக விநாயகர் காலனி, கோ. புதூர், மதுரை–2. போன் : 0452–2566842
புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சு	:	ரோலிமாக்ஸ் பிரிண்டர்ஸ், 34, பால்மால் குறுக்குத் தெரு, மதுரை – 625 001.

Koviloor Digital Library

சமர்ப்பணம்

சற்குரு ஷீரடிசாயிநாதரைத் தம் குருவாகவும்,
தம் வழிபடு கடவுளாகவும்,
போற்றி இறைபணிபுரியும் எங்களின் ஆன்மீக வழிகாட்டி
சீர்வளர் சீர் சாந்திகுமார சுவாமிகளுக்கு
இந்நூலைப் பணிவுடனும், மகிழ்வுடனும்
சமர்ப்பிக்கிறேன்.

Koviloor Digital Library

சற்குரு துணை

பதிப்புரை

அருளாளர் சீர்வளர் சீர் சாந்திகுமார சுவாமிகளின் அருளாசியுடன், எங்கள் ஸ்ரீஷீரடி பப்ளிகேஷனின் இரண்டாவது பதிப்பாக கவிஞர் முருகனடிமை இராம.இராமநாதன் அவர்களின் 'அருளமுதம்' எனும் இக்கவிதைத் தொகுப்பு நூல் வெளிவருவது, எங்களுக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

மேலும் தமிழாகரர், சைவசித்தாந்த சாகரம், தமிழ் மாருத இதழ் ஆசிரியர் உயர்திரு. சா. சாம்பசிவனார் அவர்கள் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். மற்றும் பாரத ஸ்டேட் வங்கி சென்னை வட்டாரத் தலைமை அலுவலகத்தில் உயர் மேலதிகாரியாகப் பணிபுரியும் திரு. ஆறு. மணி அவர்களும், கலைமாமணி, மதுரைத்தென்றல் இதழாசிரியர், மாமதுரை கவிஞர் பேரவைத் தலைவர் திரு. சி. வீரபாண்டியத் தென்னவன் அவர்களும் விஸ்வாஸ் புரமோட்டர்ஸ் (பி) லிட் மேலாண்மை இயக்குனர் திரு. சங்கர சீத்தாராமன் அவர்களும், ஏ.ஆர். மருத்துவமனை நிர்வாகி மருத்துவர் திரு. எம். சீனிவாசன் அவர்களும் மிகச் சிறப்பாக வாழ்த்துரை வழங்கி உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் பதிப்பகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலைச் சிறந்த முறையில் கணினியில் வடிவமைத்து, ரோலிமாக்ஸ் பிரிண்டர் மூலம் அச்சிட்டு வெளிவர உதவிய தம்பி திரு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆன்மீகத்தில் நாட்டமுடைய மெய்யன்பர்களுக்கு இந்நூல் உண்மையிலேயே ஒரு அருளமுதமாக உலா வரும் என்பதில் ஐயமில்லை.

06-01-2005
மதுரை-7

இராம. லெட்சுமி

Koviloor Digital Library

உ

சற்குரு துணை

முன்னுரை

சற்குருவின் திருவருளால் தெய்வத்தமிழ்ப் பாமாலை நூலைத் தொடர்ந்து, அருளமுதம் என்ற இந்த இறைத்துதிப் பாமாலைத் தொகுப்பு வெளிவந்து தற்போது தங்கள் கரங்களில் தவழ்கிறது.

பழனிப்பாதயாத்திரை செல்லும்போது, வழி நடையில் பாடுவதற்காக எழுதப்பட்ட பாடல்களும், மதுரை மீனாட்சியம்மன் கோவில் பொற்றாமரைக் குளத்தில் ஒவ்வொரு முழுநிலா மாலையிலும் நடைபெறும் . கவியரங்கில் பாடப்பட்ட பாடல்களும், மற்ற சில பாடல்களும் இத்தொகுப்பில் உள்ளன.

பழனி பாதயாத்திரை தொடங்கி 25 ஆண்டுகள் ஆனதை நினைவு கூர்ந்தும் இத்தொகுப்பு வெளிவருகிறது. சென்ற முறை தெய்வத்தமிழ்ப் பாமாலை நூல் வெளிவரப் பெரிதும் உதவிய சீர்வளர் சீர் சாந்திகுமார சுவாமிகள் இம்முறையும் இந்நூல் வெளிவரப் பெரிதும் உதவியிருக்கிறார்கள். ஆரம்பகாலத்தில் பழநிமுருகனை தன் உபாசனை மூர்த்தியாகக் கொண்டு வழிபட்டு வந்த சுவாமிகள், பாபாவின் அருளாணைப்படி, ஷீரடி சாயிமார்க்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு இறைப்பணி செய்து வருகிறார்கள். பொறியியல் துறையைச் சார்ந்து இருந்தாலும், தத்துவத்தில் ஆர்வம் கொண்டு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில், சைவசித்தாந்தத் தத்துவக் கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். தத்துவம், சித்தாந்தம், விஞ்ஞானம், இலக்கியம், கவிதை எனப் பல துறைகளிலும் வித்தகர். மேலும், ஜோதிடம், வாஸ்து சாஸ்திரம் போன்ற வாழ்வியல் சார்ந்த துறைகளில் பாண்டித்தியம் பெற்று, தன்னை நாடிவரும் ஆன்மீக அன்பர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். இத்தகைய சிறப்புகள் பெற்ற சுவாமிகள் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய தமிழாகரர் சைவசித்தாந்த சாகரம், முனைவர் திரு. ச. சாம்பசிவனார் அவர்கள், அணிந்துரை வழங்கி இருக்கிறார்கள். தமிழ் மாருதம் என்ற மாத இலக்கிய இதழின் ஆசிரியரான இவர்கள்

Koviloor Digital Library
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் வாயிலாகத் தமிழுக்கும் சைவசித்தாந்தத்திற்கும் அளப்பரிய பணிகளை ஆற்றி வருகிறார்கள். அவர்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை வட்டாரத் தலைமை அலுவலகத்தில் உயர் மேலதிகாரியாகப் பணிபுரியும் திரு. AR. மணி அவர்கள் வாழ்த்துரை வழங்கி இருக்கிறார்கள். திரு. AR. மணி அவர்கள் எங்கள் குடும்ப நண்பர்; உடன்பிறவாச் சகோதரர்; நான் பாரத ஸ்டேட் வங்கியில் பணிபுரியப் பெரிதும் காரணமாக இருந்தவர்; மனித நேயம் மிக்க பண்பாளர்; பழனியாண்டவர் மீது பக்தி உடையவர்; அவர்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விஸ்வாஸ் புரோமோட்டர் (பி) லிட். அமைப்பின் மேலாண்மை நிறுவனர் திரு. சங்கர சீத்தாராமன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்கள். வானுயர்ந்த பல குடியிருப்பு வளாகங்களை மதுரை மண்ணில் உருவாக்கியுள்ள இவர்கள் ஆன்மீகத்திலும், இலக்கியத்திலும் மிகுந்த நாட்டம் உடையவர். அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாமதுரைக் கவிஞர் பேரவையின் தலைவரும், மதுரைத் தென்றல் மாத இதழின் ஆசிரியருமான கலைமாமணி திரு. சி. வீரபாண்டியத்தென்னவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி இருக்கிறார்கள். என்னை மேடையேற்றிக் கவிதை பாட வைத்த பெருமானார் இவர். ஒவ்வொரு முழுநிலா மாலையிலும், பொற்றாமரைக் குளத்தின் கவியரங்கம் நடத்தி மீனாட்சி அன்னைக்கு கவிவேள்வி நடத்தி வருபவர். மனம், வாக்கு, செயல் என்று யாவற்றையும் தமிழுக்கே அர்ப்பணித்து வாழ்பவர். அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

A.R. மருத்துவமனையின் நிர்வாகி, .Dr. M. சீனிவாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்கள். அன்னை மீனாட்சி மீது அளவற்ற பக்தி உடையவர். மீனாட்சியம்மன் கோவிலின் பல நிகழ்ச்சிகளில் இவருடைய பங்களிப்பு போற்றுதற்குரியது. இவர் ஆலோசனைப்படிதான்

Koviloor Digital Library
முழுநிலாக் கவியரங்கம், பொற்றாமரைக்குளத்தில் நடைபெற்று வருகிறது. இவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஷீரடி பப்ளிகேஷன்ஸ் உரிமையாளரும், என் வாழ்க்கைத் துணைவியும் ஆன திருமதி RM. லெட்சுமி அவர்கள் இந்நூல் சிறப்பாக வெளிவர உதவியமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிட்டு என்ற எங்களால் அன்புடன் அழைக்கப்படும் திரு. N. பாலகிருஷ்ணன் அவர்கள், அவர்களுடைய ரோலிமாக்ஸ் பிரிண்டர்ஸ் மூலம் இந்நூல் வெளிவர உதவியிருக்கிறார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறையருளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் நாடுகிறார்கள். நான் எனக்குத் தெரிந்த தமிழில் இறையருளை வேண்டிப் பாடுகிறேன். குழந்தையின் மழலைச் சொற்கள் அதன் தாயை மகிழ்விப்பது போல், என் பாடல்கள் நிச்சயம் இறைவனை மகிழ்விக்கும் என்று நம்புகிறேன். அதேபோல் இக்கவிதைகள் உங்களையும் மகிழ்வித்து, உங்கள் மனதில் ஒரு நெகிழ்வை உருவாக்கியிருந்தால் அந்தப் பெருமையை இறைவனுக்கே சமர்ப்பிக்கிறேன்.

அன்புடன்

06–01–2005
மதுரை–7

கவிஞர் முருகனடிமை
இராம. இராமநாதன்

Koviloor Digital Library

தவத்திரு ஸ்ரீலஸ்ரீ அ.வே. சாந்திகுமார சுவாமிகள்

Koviloor Digital Library

தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ அ.வே. சாந்திகுமார சுவாமிகள்
116, கற்பக நகர் 10வது தெரு,
கோ. புதூர், மதுரை – 625 007.
தொலைபேசி : 0452 2560187

ஆசியுரை

திருத்தணிகைமலை வாழும் எம் முருகனே! எனக்கு என்ன புத்தி கூறுகின்றீர் ! இனி அடியேன் உன்னையன்றி வேறு யாரை தஞ்சமடைந்து உய்தி பெறுவேன்? பயனின்றி வீணே, இறந்துபடுவதுதான் என் விதியோ? அடியேனுக்குத் தந்தையும், தாயும் நீரே என்று இருக்க, அடியேன் இப்படி அலைந்து கெடலாமோ? அடியேன் உலகத்தவரால் பழிக்கப்படலாமோ? என்னைக் கண்டு நகைத்தவர்களின் கண்கள் நாணுமாறு உமது பாதத் தாமரையை என் தலைமீது வைத்து அருளி, காப்பாற்றி, உன் திருவடியில் சேர்க்க நீ மறுத்துவிட்டால் உலகம், உன்னையும், என்னையும் கண்டு நகைக்காதோ?

ஒரு குழந்தை தந்தையின் முன் சென்று அழுதால், யாராவது எடுக்கட்டும் என்று அத்தந்தை பார்த்திருப்பாரோ? இந்த நியாயம் அடியேன் பொருட்டு தங்கள் திருவுள்ளத்தில் நினைப்புக்கு வராதோ? (ஏதுபுத்தி ஐயா... திருத்தணிகைத் திருப்புகழ்) என வரும் அருணகிரிநாதரின் தெய்வத் தமிழ் வாக்கின் படி,

உள்ளத்தாலும், உணர்வாலும், செயலாலும், உடலாலும், தெய்வத்தை கதி என்று எண்ணி, அதன் அன்பில் மெல்ல மெல்லக்கரைந்து, மருகிடும் வாழ்க்கையில், இருவிழி நனைய, இருகரம் கூப்பி, தாய்த்தமிழால், அருளமுதம் வேண்டி உருகுகிறார் எனதருமைக் கவிஞர் இராம. இராமநாதன்.

முருகனின் அருள் வேண்டல் பதிகத்தில் 'தவஞ்செய்ய மலையிலே' என்று தொடங்கும் பாடல், தவத்தைக் குறித்த, கவிதையின் வரமாகும். மேலும் 'ஈராறு விழிகளில், ஈராறு செவிகளில் ஒன்றினை தேறாத உன்மகன் திசைதனில் திருப்பிடத் திருவுளம் கொள்ளும் ஐயா'

Koviloor Digital Library

எனும் வரிகளில் கவிஞரின் இதயத்தைப் பிழிந்த கண்ணீர் நம் நெஞ்சைச் சுடுகிறது.

கருவளர் நிலையிலும், மடிவளர் நிலையிலும், தரைதவழ் நிலையிலும், தளிர்நடை அசைவிலும், கடைவழி செல்லும் சிறுமழலை காண்பது யாவும் கேட்க, அதற்குத் தாய் தக்கது வாங்கித் தரும் நிலையிலும், மதிவளர் நிலையிலும், மனைமாட்சி வரவிலும், சொந்தச் சுமையுடன், பந்தச் சுமையையும் சுமந்து, தாயே என்னைமட்டும் சுமையென்று எண்ணாதே என தாயின் குழந்தையாய், அரிதாரம் பூசாமல் பல வேடம் பூண்டு உழலும் இவ்வுலக வாழ்க்கையின் நிலைப்பாட்டை எடுத்துக்காட்டி, அழுகையின் தரங்கொண்டும், தொழுகையின் தரங்கண்டும் துயரங்கள் போக்க வேண்டும் என்று மதுரை மீனாட்சியை மன்றாடுகிறார் இராமநாதன்.

இத்தகைய அருளமுதத்தை படைத்த கவிஞர். இராம. இராமநாதன் அவர்களுக்கும், அருளமுதத்தை உணர்ந்து ஓதும் மெய்யன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலமும் கிடைத்திட என் ஸத்குருநாதன், சகல தெய்வங்களாக விளங்கி அருள்புரியும் சீரடி சாயிநாதனின் தாமரைத் திருவடிகளைப் போற்றி, பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

06–01–2005
மதுரை–7

அன்புடன்

சிவ சாந்திகுமார சுவாமிகள்
06 ஜனவரி, 2005

சிவலிங்கம்,
கோ. புதூர், மதுரை. 7.

(அ.வே. சாந்திகுமார சுவாமிகள்)

Koviloor Digital Library

முனைவர் சா. சாம்பசிவனார்
செந்தமிழ்ச் செல்வர், தமிழாகரர்,
ஆசிரியர், தமிழ் மாருதம்,
நிறுவனர், .
மனோண்மணி சாம்பசிவனார் நூல் நிலையம்,
67, பாரத ஸ்டேட் வங்கி அலுவலர்,
முதலாவது குடியிருப்பு, புறவழிச்சாலை,
அ.பெ.எண். 35, மதுரை – 16.
தொ.பே. எண் – 2384238

அணிந்துரை

முருகனடிமை திரு. இராம. இராமநாதன் எழுதிய அருளமுதம் என்னும் கவிதைநூல் சரணமாலை முதல் கொங்கு நாச்சி அம்மன் ஈறாக 14 தலைப்புகள் கொண்டுள்ளது.

கணபதி மீது 1, மதுரை அம்பிகை அங்கயற்கண்ணி மீது 4; முருகப்பெருமான் மீது5; சற்குரு சாயி 2; முத்துமாரி 1; கொங்குநாச்சி அம்மன் 1 என்ற முறையில் பாடல்கள் அமைந்துள்ளன். மொத்தம் 161 பாடல்கள், அவற்றில் ஒருபாடல் 108அடிகள் கொண்டது.

பாடல்கள் பெரும்பாலும் சந்தத்துடன் பாடக்கூடியன. மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம், அம்பிகை மீனாட்சி, பாண்டியனின் மகளாக அவதரித்த முதல் திருமணம் வரை செய்திகள் சுவைபடக் கவிதை வடிவில் தரப்பட்டுள்ளன.

'திசைகள் எட்டும் வென்றனள், தேசம் யாவும் வென்றனள்;
வசைகள் பாடும் ஈனரின், வாழ்வொழித்துக் கொன்றனள்' (8)
'எங்கும் வாழ்த்து முழங்கிட, எங்கும் வேதம் ஓதிட
எங்கும் மலர்கள் சொரிந்திட, எங்கும் மகிழ்வு பொங்கிட..' (23)

என்பன இப்பகுதியில் ஓசைநயம் கொண்டவை. இத்தகைய ஓசைநயம் மிகுந்த பாடல்கள், பல இடங்களிலும் வந்துள்ளன. சில சான்றுகள் –

'சலசல வென்று சலங்கைகள் கொஞ்ச
சங்கரி உமையே வந்தருள் வாயே ! (தோத்திரமாலை)
'காவடிகள் ஆடும்போது கூடவரும் சண்முகம்
பாவடிகள் பாடும்போது தாளம்போடும் உன்முகம்...! (வேல்முருகா)

அணி நயங்கள் :

'கொலுவினில் வைத்த பொம்மையைப் போலக்
குழந்தை நானும் வாழுவதோ ?' (தோத்திரமாலை)
'தந்தை தாயைப் பிரிந்த பிள்ளை
தன்னந்தனியே தவிப்பது போலச்
சந்தை உலகில் மந்தை உறவில்
சலித்துச் சோர்ந்து நான்நி ன்றேன்' (மேலது)
'அலையும் கடலில் விளையும் நுரைபோல்

Koviloor Digital Library

அடியேன் பிறந்து உழல்கின்றேன்'
'கருவில் வளரும் மழலை சலனம்
கருத்தில் உணரும் தாய்போல' (மேலது)

'ஒருமாரில் அமுதுண்டு மறுமாரில் கால்வைத்து
மகிழ்வோடு உதைத்த போது
இருபாதம் தளிர்தொட்டு இதழாலே முத்தாரம்
தருகின்ற அன்னை போல...' (அருள்வேண்டல்)

என்பன, அரிய உவமைகள் கொண்டவை.

'செங்கழுத்து சங்குதான்; சிவந்த தோள்கள் தந்தம்தான்
கொங்கைஇரு கோபுரம்; குறுகும் இடை சிறுகொடி....
'அலையும் கூந்தல் அருவியாம், அவளே அழகு வடிவமாம்;
வளையும் வில்லே புருவமாம்; வஞ்சி இமை விசிறியாம்.. (திருக்கல்யாணம்)
'அறிவு என்ற ஆலயத்தை அலங்கரிக்கும் ஐயனே' (வேல்முருகா)
'இருளாம் துயரைத் தீர்ப்பவரே' (சற்குரு துணை)

என்பன உருவகங்கள்.

இடையிடையே சில வரலாற்றுச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. குமரகுருபரஅடிகள், மதுரை அங்கயற்கண்ணம்மை திருக்கோயிலில் 'மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்' அரங்கேற்றியபோது, அம்பிகையே குழந்தைவடிவில் வந்து, திருமலை நாயக்கர் மடியில் அமர்ந்து 'தொடுக்குங் கடவுட் பழம்பாடல்' என்னும் வருகைப் பருவப்பாடலின்போது, நாயக்கர் கழுத்தில் இருந்த முத்துமாலையை எடுத்துக் குமரகுருபரர் கழுத்தில் அணிவித்துவிட்டு மறைத்தனள். இதனைக் கவிஞர் இராமநாதன்

'குருபரன் பிள்ளைத் தமிழினைக் கேட்டுக்
குழந்தை வடிவில் வந்தவளே...
திருமலை ராயன் மடிதனில் அமர்ந்து
தீந்தமிழ் கேட்ட தாரகையே' (தோத்திரமாலை)

என்ற அடிகளில் காட்டுகின்றார்.

தமிழைப்பற்றி ;

கவிஞர், ஆங்காங்கே அருமைத்தமிழைப்பற்றியும் குறிப்பிடுவது இவரின் தமிழ்ப்பற்றுக்குச்சான்று.

'வளரும் தமிழாய் வாழ்வின் சுவையாய்
வளங்கள் வழங்கி அருள் தாயே' (தோத்திரமாலை)
அருந்தமிழ் ஆர்வலனே (வருகைப்பதிகம்)
'என்றுமுள செந்தமிழில் பாடுவது உன்புகழ்' (வேல்முருகா)
'ஓதுகின்ற செந்தமிழில் ஓவியமாய் மிளிர்பவன்' (மேலது)
'நற்றமிழ் மண்ணைக் காத்திடுவாய்' (மழையாய் வருவாய் முருகா)

Koviloor Digital Library

சைவசித்தாந்தம் :

கவிஞர், பாக்களில் உயர்சைவ சித்தாந்தக் கருத்துக்களும், ஆங்காங்கே ஒளிவிடுகின்றன.

'முன்வினைப் பயன்யாவும், மூர்க்கமாய்ச் சூழ்ந்தாலும்....' (வருகைப்பதிகம்)
'அஞ்செழுத்தை ஒதிடும் அனைவர்க்கும் அடிமையாம்..' (முனீசுவரன் தோத்திரம்)
'ஊழ்வினை மொத்தமாய் எனைவந்து சூழ்கையில்..' (முருகன் அருள்வேட்டல்)
'அருளினைத் தேடாமல் அன்பினை நாடாமல்'
'ஆணவம் கொண்டு திரியும்
'இருவினை மும்மலம் இவையெலாம் ஒழிந்திட
உனதருள் ஒன்று போதும்' (அருள்வேண்டல் பதிகம்)

என்பன சில சான்றுகள்.

கவிஞர் நோக்கம் :

நூலின் இடையிடையே கவிஞர், இதனைப்பாடியதன் நோக்கத்தையும் குறிப்பிடுகின்றனர்.

'பாடுமென் பாடலைப் பாமாலை ஆக்கியுன்
பாதமலர் சூடுகின்றேன்
பரிவோடு உன்மகன் பாடலைக் கேட்டுளன்
பாடுகள் போக்கி அருள்க' (அருள்வேண்டற் பதிகம்)

என்னும் அடிகள் சான்று. மொத்தத்தில் அனைவரும் பண்ணோடு பாடத்தகும் அரியபாடல் தொகுப்பு இது எனலாம். கவிஞர் பால் இயல்பாகவே ஆற்றல் உள்ளது. யாப்பிலக்கணப் பயிற்சியும் இருந்தால் கவிதை வளம் மேலும் சிறக்கும். கவிஞரின் பணி சிறக்க என் வாழ்த்துகிறேன்.

மதுரை – 16.
31–12–2004

31.12.04

(முனைவர் சா. சாம்பசிவனார்)

Koviloor Digital Library

உ
சற்குரு துணை

AR. MANI
Manager (Business Planner)

STATE BANK OF INDIA
Region I,
Zonal Office, 86, Rajaji Salai,
Chennai - 600 001.

வாழ்த்துரை

எனது நீண்ட நாள் நண்பரும், தெய்வீகத்தமிழை நாவினில் சுமந்து, கால் நடைப் பயணமாய் வருடந்தோறும் பழனி முருகனுக்கு படையல் வைக்கும் கவிஞர் இராம. இராமநாதன், தான் பருகிய அருளமுதத்தை எல்லோரும் சுவைத்து மகிழ வேண்டும் என்ற அளப்பரிய ஆர்வத்தால் பாமாலை தொகுத்துள்ளார். சைவமும் தமிழும் உயிரணுக்களில் உறவாடித் தழைக்கும் செட்டி நாட்டவரின் பக்திதான் இந்த அருளமுதத்தில் பறைசாற்றப்பட்டிருக்கிறது. செறிந்த எழுத்துகள், நிறைந்த கருத்துக்களை உள்ளடக்கி உடலையும் உள்ளத்தையும் உருக்கும் வகையில் நெய்யப்பட்டு மல்லிகைச் சோலையின் தென்றலாய் மனம் தொட்டு மணம் வீசி நிற்கிறது.

மீனாட்சி திருக்கல்யாணம் பாடும்போது, மங்கை மீனாள் – சொக்கர் தம்பதியர்களிடம் வரம்வேண்டிச் செட்டிநாட்டுச் சமையலின் சுவையைச் ருசித்தவாறு மொய் எழுதும் வரிசையில் வையம் யாவும் நிற்கையில் நம் மனமும் அணிவகுத்து நிற்கிறது. பந்தச் சுமையை நெஞ்சில் ஏற்றி பாவலர் அவர் நடக்கும் போதும், என்னை ஒருசுமையாக எண்ணாதே என அன்னை மீனாட்சியை எண்ணி உருகும் போதும் பலாச்சுளையாகப் பாக்கள் இனிக்கின்றன. பக்தி இரத்தநாளத்தில் புகுந்து உடலெங்கும் பரவுகிறது. வேல்முருகன் வேல்பாடி, நீண்ட நடையின் வேதனை மறக்க, காலடியெடுத்து வைக்கும்போது மனத்தின் அடிநாதத்திலிருந்து குதித்தெழும் ஒலி விழுதுவிட்டு விருட்சமாய் இந்த வையம் முழுதும் வியாபிக்கும் குரலாக ஒலிக்கிறது.

பூமிப்பந்தில் முருகாம் அழகு முழுதும் நிறைய விசும்பும் துளிகள், கடைமடை நிறைக்கவும், கனமழை பொழியவும், கவிமழையால் முருகனின் பாதங்களைக் கவிஞர் கழுவச் செய்வது நெஞ்சைத் தொடுகிறது.

Koviloor Digital Library

சீறிப்பாய்ந்த அன்னை காவேரி சிறுத்து ஓடை ஆனதினால் நெஞ்சைப் பிளக்கத் துயரில் நித்தம் உழலும் உழவர், மழை முகிலைக் காணும் போதெல்லாம் தாயின் மார்புகளில் பாலைத் தேடித் தவிக்கும் குழந்தையாய் அலைபாய்வதை எடுத்துரைக்கிறார். இல்வாழ்வில் தனது இயலாமையையும் இறைவனின் பெருங்கொடையையும் எண்ணிப் பேருவகை கொள்கையில்.

இருதாரம் கொண்டுநீ என்றைக்கும் சிக்கலில்
எழிலோடு விளங்கு கின்றாய்
ஒருதாரம் கொண்டநான் ஓயாது புலம்பியே
உலகினில் வாடுகிறேன் என்று கூறுகிறார்.

இறையியல்புக்கு இருதாரமும், உலகியல் மாந்தர்க்கு ஒருதாரமும் இந்துசமய வாழ்க்கையாக அமைந்திருப்பதை சுட்டிக் காட்டிச் செல்கிறார்.

தெளிவில்லா வேதாந்தம் பேசி வாழ்வைத் தேக்கியதை உணர்ந்தும், இளவட்டம் மாறி நரை வட்டம் கூடியும், மனமாற்றத்துக்கு ஆளாகாமல் அலைகடலின் நுரையாய் அலைபாயும் அவல வாழ்வை உணர்த்துகிறார்.

நல்ல கருத்துக் கனிகளைத் தாங்கிய கவிதைகள் இனிய நாதத்தை எழுப்பும் அனுபவப் பிழிவுகள், உச்சி முதல் உள்ளங்கால் வரை, இறையருளால் உடலை உருக்கிச் செல்லும் பாக்கள். கம்பனையும், கண்ணதாசனையும் மறுபிறவியாகக் கொண்டு, அவர்தம் நடையில் இன்னுமொரு திருமுறையைப் படைக்கும் ஆற்றல் கொண்டவர் இவர் என்பதை அருளமுதின் ஆசிரியர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். தொல்காப்புகழைத் தாங்கு இலக்கிய உலகில் சுடர் விளக்காய் ஒளிதந்து பக்தியில் மக்களைப் பக்குவப்படுத்த அவர் நீண்டநாள் வாழ்ந்து பல படைப்புகளைத் தர வேண்டுமென தில்லைக் கூத்தனை தினம் வேண்டி, மகிழ்வில் நனைகிறேன். வாழ்க கவிஞர் இராம. இராமநாதன் அவர்கள்.

06–01–2005
மதுரை–7

(AR. MANI)

Koviloor Digital Library

ஓம்சக்தி மூகாம்பிகா சரணம்

கவிமாமணி சி. வீரபாண்டியத் தென்னவன்
ஆசிரியர், மதுரைத் தென்றல், தலைவர், மாமதுரைக் கவிஞர் பேரவை,
திருவள்ளுவர் நகர் 10வது குறுக்குத் தெரு,
பழங்காநத்தம், மதுரை – 3.
செல் :- 98421 81462

வாழ்த்துரை

தேசமே தேடிடும் தென்னவர் தெய்வமே !
ஈசனின் பாகமே ! ஏழிசை வாசியே !
மங்கலம் தந்தருள் மூகாம் பிகா – உன்றன்
செங்கமலச் சீரடி காப்பு.

கவிஞர் முருகனடிமை இராம.இராமநாதன் தெய்வத்தின் திருவருளால் குறைவின்றிப் பாடியிருக்கும் இந்நூல் அருமையான பக்திப் பாக்களின் அணிவகுப்பு. சந்தத்தமிழிசை முந்திவரக் கந்தன் திருவருள் உந்திவிடப் பொங்கும் உள்ளொளிப் பெருக்கின் உப்பரிகை. முத்துக் குவியலின் மூச்சுப்பேச்சொலி – தத்தும் வலம்புரிச்சங்கின் நாதம் கலந்த நடை. மொத்தத்தில் இராமநாதன் பெற்றெடுத்த நன்முத்து இந்நூல்.

உள்ள மென்ற கோவிலில்
ஒளிர வைத்த சக்தியே
பிள்ளை என்றன் பாடலைக்
கேட்டு அருள் முக்தியே.

என்கின்ற பொழுது, குழந்தையாய் காட்சி தரும் கவிஞர் இராம. இராமநாதன் அவர்கள்,

விகடனாய் திரியும் என்னையும் காத்து
வித்தகம் அருள்வாய் கலைமகளே

Koviloor Digital Library

என்கிற பொழுது ஞானியாய் தன்னையறிந்து உண்மையின்ப முகம் காட்டுகின்றார்.

அழுதிடும் சவலைப் பிள்ளையைப் போல்
அடியவன் வாடிக் கலங்குவதோ?

என இறைஞ்சுமிடத்தில் கண்களைப் பனிக்க வைக்கும் கவிஞராகிறார்.

கனவிலும் நனவிலுமுன் கழல்களை நான் பணிவேன் –
மனதிலும் செயலிலும் உன் மலரடி நான் தொழுவேன்

என்னுமிடத்தில் தன்னைமறந்து தலைவன் தாளடி தலைப்படும் நல்லுயிராய்த் தெரிகிறார்.

மூடனாய் வாழ்கிறேன் முழுமதி தந்தென்
மூர்க்கங்கள் போக்கி வைப்பாய் !

எனுமிடத்தில் குடம்பை தனித் தொழியப் பரம்பொருள் பாதம் தேடும் சீவன் முக்தராய் வெளிப்படுகிறார்.

பாடிப் படித்திட வேண்டிய பயனுள்ள நூல். நாடிடும் நெஞ்சுக்கு, நன்மை வழங்கும் நல்விருந்து.கோடி கொடுப்பினும் இணையில்லாதிருக்கும் முத்து மணிமாலை. இது நகரத்தார் பெருமகனார்தம் வரிசையில் நற்றமிழுக்கு வழங்கும் பெட்டகம். உண்மையில் இது இயல்பாக அமைந்துள்ளது.

சகலகலா வல்லி திருவருளால் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ இராமநாதனை வாழ்த்துகிறேன். வாழ்க வளமுடன்.

அன்புடன்

மதுரை –3
06–01–2005

கவிமாமணி சி. வீரபாண்டியத் தென்னவன்

Koviloor Digital Library

சங்கர. சீத்தாராமன்
மேலாண்மை இயக்குநர்

விஸ்வாஸ் புரமோட்டர்ஸ் சர்வீஸ்
78, திருப்பரங்குன்றம் ரோடு, மதுரை–10.

வாழ்த்துரை

'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு' என்பார் வள்ளலார். அந்த மரபில் பூமாலை புனைவோரும் உண்டு. பாமாலை புனைவோரும் உண்டு.

இப்போது உங்கள் கையில் இருக்கும் 'அருளமுதம்', கவிஞர். முருகனடிமை இராம. இராமநாதனின் பக்திக் கடலில் விளைந்தது. அமுதத்தை விரும்பாதார் யார் ?

இந்நூலில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு சந்தங்களில் வீறு மிக்க கவிதைகள் காட்சியளிக்கின்றன.

'வலைகளாய் உறவுகள் – அலைகளாய்ப் பிறவிகள்' சிறப்பான சொற்சித்திரம் இது.

'தனிமயில் மீதேறி தயவுடன் எனைக் காக்கத்
துணையிரு மயிலுடனே துரிதமாய் வருவாயே'

தனிமையில் தவிக்கும் மனத்தின் இந்த வேண்டுதல் முருகனை அண்மையில் சேர்க்கும் ஆற்றல் உடையது.

'இருதாரம் கொண்டு நீ என்றைக்கும் சிக்கலில் எழிலோடு விளங்குகின்றாய்' என்று கவிஞர் கூறும் 'சிக்கல்' சிலேடையில் சிங்காரவேலனும் சிந்தை பறிகொடுப்பது நிச்சயம் !

'அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்' குறிப்பிடத்தக்க பகுதி! அதன் சிறப்போ மிகுதி ! பரஞ்சோதி முனிவரின் செய்யுள்களைப் படித்துணர வாய்ப்பு இல்லாதவர்கள் இவரது கவிதைகளில் திருவிளையாடற்புராணக் கருத்துக்கள் மிளிர்வதைக் கண்டு மகிழலாம். சிவனின் திருக்கோலத்தை வருணிக்கும் மூன்று பாடல்களும் மெச்சிடத்தக்க உச்சித் திலகம் !

மழைவளம் செழிக்கவும், மனையறம் நிலைக்கவும், மொழிவளம் சிறக்கவும் முயற்சிகள் பலிக்கவும், வருந்துயர் போகவும், வளமைகள் பெருகவும் விரும்புகிறார் கவிஞர். பொதுமை பூக்கும் இந்தச் சமுதாயச் சிந்தனை பாராட்டத்தக்கது.

'சிறுமடல் மல்லிகை அதன் மணம் போல என் சித்தத்தில் மணக்கும் தாயே' என்கிறார் ஆசிரியர். நூலைப் படித்து முடிக்கும் போது 'நெஞ்சமெல்லாம் இவரது கவிதை நயம் மணக்கிறது' என்று என்னைப் போல் நீங்களும் சொல்வீர்கள். கவியின் வெற்றிக்கு இதுதானே அடையாளம் !

அன்பன்

சங்கர. சீத்தாராமன்

(சங்கர. சீத்தாராமன்)

மதுரை–10
01–01–2005

Koviloor Digital Library

Dr. M. SRINIVASAN M.D.,
Director

A.R.HOSPITAL
609,K.K.Nagar,
Madurai -20.
Cell:9842174995

வாழ்த்துரை

இறைவியும், இறைவனும் புவி ஆண்ட புண்ணிய பூமி மதுரை. கேட்ட குரலுக்கு செவிமடுத்த இறைவன் 64முறை தரிசனம் தந்த திருத்தலம் இது. ஈரடியால் உலகை அளக்கும் திருக்குறளும், அன்னையின் புகழ்பாடும் மீனாட்சி பிள்ளைத்தமிழும் மற்றும் பல அரிய காவியங்களும் உலவி வரும் பொற்றாமைரைக் குளத்தைப் பெற்ற பேரதிசயம் உள்ள, 'உள்ளம் ஒரு கோயில்; ஊனுடம்பு ஆலயம்' என்பதற்கு ஏற்ப, அமைக்கப்பட்ட ஆலயத்தை பெற்றவர்கள் நாம். இவ்வாறு இத்திருத்தலத்தின் பெருமையை கூறிக் கொண்டே செல்லலாம் நாம்.

அன்பிற்கு இருப்பிடமாய், கருணை பொழியும் கண்களுடன் ஓர் அடியவரைப் போல, முகத்தில் ஒளியுடன், தோளில் ஒரு பையுடன் மதுரையில் ஒருவரைக் கண்டால், அவர் பெயர்தான் இராமநாதன். இந்நூலின் ஆசிரியர்; வங்கியில் வேலை செய்தாலும், சதாநேரமும் சர்வேஸ்வரன் சிந்தனையுடன் தான் இருப்பார். திருக்குறளின் அறத்துப்பாலின் கருத்துக்களை இவருள் காணலாம்.

இவரின் உள்ளத்தில் வேர்விட்டு அறிவில் மலர்ந்த பூக்கள் தான் இந்தக் கவிதைகள்.

மருத்துவன் என்ற முறையில் **MILE STONE** எனப்படும் குழந்தை வளர்ப்பை ஆங்கிலத்தில் பயின்ற நான் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் கூறப்பட்டுள்ள குழந்தையின் வளர்ப்புப் பருவங்களான காப்பு, செங்கீரை, தாலம், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, ஊசல் என்ற பத்துப் பருவங்களை கண்டு வியந்தேன். ஆனால் அவற்றை பருகமுற்பட்டபோது அச்செந்தமிழைப் பயில இயலாமல் திணறினேன். இராமநாதனின் இக்கவிதை அக்குறையை தீர்த்துப் பயில எளிமையாக எழுதப்பட்டுள்ளது.

கந்த சஷ்டி கவசம் கேட்ட காதுகளைச் சாயிகவசம் கேட்க வைத்துள்ளார். வாழும் தெய்வமான சாயிபாபாவைத் தன் குருவாகக் காண்கிறார். 'தாணு மாலயன் சேர்ந்த கோலம், தத்தர் என்னும் சித்தர் வடிவம் !' என்கிறார்.

Koviloor Digital Library

'எந்த வடிவில் எவ்வாறாயினும், எதுவும் என்னை அணுகாதிருக்க' என்று வேண்டுதல் வைக்கிறார்.

நவராத்திரி நாயகி – மீனாட்சி தோத்திரமாலை என்ற தலைப்பில்

'குருபரன் பிள்ளைத் தமிழினைக் கேட்டுக் குழந்தைவடிவில் வந்தவளே! என்று அடியெடுத்து தன் பாட்டையும், பௌர்ணமி முழுநிலாக் கவியரங்கினை கேட்க வரச்சொல்லி அன்பு வேண்டுகோள் விடுகிறார்.

தூண்டில் மீனாய்த் துடித்திடும் மைந்தன்
துயரம் தீர்ப்பாய் தூயவளே !

'கரைதனை அறியா வினைகளை வெல்லக்
கருணை புரிவாய் என் தாயே ! என்ற
வரிகள் படிப்பவரை இருமுறை சிந்திக்க வைக்கின்றன.

'மலரின் மணமாய் மனதுள் மலர்வாய்'

என்ற வரிகள் செந்தமிழின் சுவையைத், தேனாய் இனிக்க வைக்கின்றன.

தந்தை, தாயைப் பிரிந்த பிள்ளை, தன்னந்தனியே தவிப்பது போல் – என்ற வரிகளைப் படித்த கண்கள், நேற்றைய சுனாமிக் கொடுமைகளை நினைவுபடுத்த, அதற்கு அடுத்துவரும் வரிகள் அந்தக் காயத்திற்கு இட்ட மருந்தைப் போல் உள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு வரிகளும் இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் ஏற்றாற்போல் உள்ளவிதம் இவரின் உள்ளப் பண்பை வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறு ஒவ்வொரு வரிகளையும் நான் விமரிசித்துக் கொண்டிருந்தால் நான் இந்த முழுப்புத்தகத்தையே மீண்டும் எழுதியதைப் போல் இருக்கும்.

அருளமுதம் எல்லார் உள்ளத்தையும் ஆட்கொள்ள

நல்லாசிகள்.

அன்னை மீனாட்சி சுந்தரவல்லி என்றும்
உடனிருப்பாள். (துணையிருப்பாள்)

மதுரை–20
01–01–2005

டாக்டர் M. சீனிவாசன் M.D.,

Koviloor Digital Library

பொருளடக்கம்

		பக்க எண்
1.	சரணமாலை	1
2.	சற்குரு துணை	3
3.	சாயி கவசம்	5
4.	நவராத்திரி நாயகி மீனாட்சி தோத்திரமாலை	9
5.	அருள் வேண்டல் பதிகம்	14
6.	மீனாட்சி தோத்திரமாலை	21
7.	அம்மா அருள்புரியே !	23
8.	அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்	25
9.	வருகைப் பதிகம்	32
10.	வேல்முருகா ! வேல் !	36
11.	மழையாய் வருவாய் முருகா !	39
12.	முருகன் அருள் வேண்டல்	42
13.	காரைக்குடி முத்துப்பட்டணம் அருள்மிகு முத்துமாரி திருப்பதிகம்	47
14.	முனீஸ்வரன் தோத்திரம்	53
15.	கொங்கு நாச்சி அம்மன்	55
16.	ஸ்ரீ ஸாயிபாபாவின் பதினொரு உபதேச பொன்மொழிகள்	56

Koviloor Digital Library



கற்பக விநாயகர் துதி

கற்பகமாம் விநாயகனைக் கருத்தினிலே வைத்து அவன்
பொற்பாதம் பணிபவர்க் கெப்போதும் மங்களமே !

கொப்புடையவள் துதி

கொப்புடைய நாயகியைக் குலங்காக்கும் திருவிளக்கை
எப்போதும் துதிப்பவர்க் கென்றென்றும் மங்களமே !

இளங்குடி ஐயனார் துதி

எல்லைக் காக்கும் இளங்குடி யானை
உள்ளன் போடு துதிப்ப வாக்கே
இல்லை துயரம் ; இல்லை கவலை !
என்றுந் தொடரும் மங்கள மாமே !

கந்தர் அநுபூதி

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய் !
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சோதரனே !

Koviloor Digital Library



சரண மாலை

அருளே சரணம் ! அன்பே சரணம் !
அன்னை மீனாள் மகனே சரணம் !
இருளைப் போக்கி ஒளியைச் சேர்க்கும்
ஈசன் மகனே சரணம் ! சரணம் !
உருகிப் பணியும் அடியார் மனதில்
ஒளிரும் ஞானச் சுடரே சரணம் !
அருகம் புல்லைச் சூடி மகிழும்
அன்புச் செல்வா சரணம் ! சரணம் !

திருவே சரணம் ! தெளிவே சரணம் !
திகழும் யோக வடிவே சரணம் !
கருவாய் விளங்கிக் கவிஞர் மனதில்
கவியாய்ச் சுரக்கும் தமிழே சரணம் !
அருவம் உருவம் இவைகள் கடந்த
அருளே உயிரே சரணம் ! சரணம் !
அருகப் புல்லைச் சூடி மகிழும்
அன்புச் செல்வா சரணம் ! சரணம் !

அழகன் மருகன் முருகன் போற்றும்
ஆனை முகனே சரணம் ! சரணம் !
கழல்கள் அதிரக் களித்தே ஆடும்
காளித் தாயின் சுதனே சரணம் !
திருவாம் ஈசன் பாதம் பணியும்
தெய்வக் களிறே சரணம் சரணம் !
அருகம் புல்லைச் சூடி மகிழும்
அன்புச் செல்வா சரணம் சரணம் !

Koviloor Digital Library

உழலும் மனிதர் நலமாய் வாழ
உன்னத அருளைத் தருவாய் சரணம் !
மழையைப் போல கருணைப் பொழிந்து
மங்களம் அருள்வாய் சரணம் ! சரணம் !
தருவாய் உந்தன் அருளை என்றுன்
தாள்கள் பணிந்தேன் சரணம் ! சரணம் !
அருகம் புல்லைச் சூடி மகிழும்
அன்புச் செல்வா சரணம் ! சரணம் !

ஊழின் வினையும் உலகத் துயரும்
ஒருங்கே ஒழிய அருள்வாய் சரணம் !
வாழி என்றுன் பதங்கள் பணிந்தோம் !
வந்தே நலங்கள் தருவாய் சரணம் !
தருமி போலத் திரியும் எனக்கும்
தமிழைத் தருவாய் சரணம் ! சரணம் !
அருகம் புல்லைச் சூடி மகிழும்
அன்புச் செல்வா சரணம் சரணம் !

மலரே ! மணமே ! மனதுள் அருளே !
மலையே ! மடுவே ! மகிமை ஒளியே !
அலையே ! கடலே ! அடங்காப் புயலே !
அன்பில் தாயே ! அருமைச் சேயே !
நிலையாய் விளங்கும் நீதிக் கனலே !
நெகிழும் பக்தர் விழியின் நீரே !
அருகம் புல்லைச் சூடி மகிழும்
அன்பே அருளே சரணம் ! சரணம் !



Koviloor Digital Library

அருளமுதம்

சற்குரு துணை

ஓம் சாயி நமோ நம !
ஸ்ரீ சாயி நமோ நம !
ஜெயஜெய சாயி நமோ நம !
சற்குரு சாயி நமோ நம !
ஆதி குருவாய் வந்தவரே !
அடியவர் துயரம் களைபவரே !
சோதி வடிவம் ஆனவரே !
சுந்தரச் சுடரே சாயீஸ்வரா ! (ஓம்)

அன்பே சிவமாய் ஆனவரே !
அன்னை வடிவே அருள்நிதியே !
இன்ப(ம்) துன்பம் கடந்தவரே !
எங்கள் குருவே சாயீஸ்வரா ! (ஓம்)

Koviloor Digital Library

இருளாம் துயரை தீர்ப்பவரே !
அருளும் ஒளியைத் தருபவரே !
மருளும் மனதை மீட்பவரே !
மகிமை மிக்க சாயீஸ்வரா ! (ஓம்)

ஆதி அந்தம் அற்றவரே !
அடியார் போற்றும் அற்புதமே !
வேதவடிவாய் ஆனவரே !
வெற்றி அருள்வீர் சாயீஸ்வரா ! (ஓம்)

இருவினைத் துயரப் பிணிநீக்கி,
மும்மலத் தடைகள் தனைப்போக்கி,
நானிலம் போற்ற எமக்கருளி
நன்மைகள் தருவீர் சாயீஸ்வரா ! (ஓம்)

ஐந்தாம் சூட்சுமம் தனைவென்று
ஆறும்ஆறு நிலை கடந்து
எழுகடல் பிறவிக் கரையேற
எமக்கு அருள்வீர் சாயீஸ்வரா ! (ஓம்)

எண்குணம் கடந்த பூரணமே !
எங்களை ஆளும் நாயகமே !
ஒன்பது வாசல் ஆலயத்துள்
ஒளிரும் ஜோதி சாயீஸ்வரா ! (ஓம்)

தூலம் சூட்சுமம் இவைகடந்து
துவாரக ஒளியாய் வாழ்பவரே !
காலம் அளவு இவைகடந்த
கருணைக் கடலே சாயீஸ்வரா ! (ஓம்)

சமயம் கடந்த தத்துவமே !
இமயம் வாழும் அற்புதமே !
சமயம் இதுஎமைக் காப்பீரே
சத்திய வடிவே சாயீஸ்வரா ! (ஓம்)

Koviloor Digital Library

சாயி கவசம்

சீரடி வாழும் சாயி நாதா !
சேவடி பணிந்தோர்க் கருளும் ஈசா !
துவாரகமாயி ஆன சுடரே !
துனியில் விளையும் தூய உதியே !
ஆலம் அமர்ந்த தெட்சிண குருவாய்
வேலம் அமர்ந்த வித்தக வடிவே !
சாவடி என்ற தங்கு மிடத்தில்
சேவடி சாற்றிச் சிறப்புச் செய்தாய் !
பாவடி புனைந்த பக்தர்க் கெல்லாம்
பரம பதத்தைப் பரிவுடன் தந்தாய் !

அணையா தீபம் ஆன்ம சொரூபம்
அருளை வழங்கும் லெண்டி தீபம் !
பூட்டி மந்திர் புண்ணிய வாசம்
புத்தொளி அருளும் சத்திய நேசம் !
தாணு மாலயன் சேர்ந்த கோலம்
தத்தர் என்னும் சித்தர் வடிவம் !
குருவே அன்னை ! குருவே தந்தை !
குருவே தெய்வம் ! குருவே யாவும் !
குருவே ஒளியாம் ! குருவே வழியாம் !
குருவைப் பணிவோம் ! அருளைப் பெறுவோம் !

சாயி பாதம் என்றும் பணியும்
சேயாம் என்னைச் சாயி காக்க !
தூலம் சூட்சுமம் இருநிலை காக்க !
வாழும் பிராண வாசியைக் காக்க !
கோசம் ஐந்தும் சாயி காக்க !
கொற்றவன் எந்தன் உயிரைக் காக்க !
காரண காரிய இயல்பைக் காக்க !
பூரண ஞானப் புலன்கள் காக்க !
நாடிகள் மூன்றையும் நாயகன் காக்க !
ஊடிடும் சக்கரம் யாவையும் காக்க !

Koviloor Digital Library

உச்சியில் என்றும் உன்னடி இருக்க !
மெச்சும் மேனியை மெய்யன் காக்க !
எலும்புத் தசைகளை இயல்புடன் காக்க !
இயங்கும் நரம்பு மண்டலம் காக்க !
வாதம் பித்தமம் சிலேட்டுமம் என்னும்
வகைகள் மூன்றையும் வசமாய்க் காக்க !
எந்த நோயும் வாரா தென்னை
எந்தன் சாயி என்றும் காக்க !
உச்சி முதலாய் பாதம் வரையில்
மெச்சி என்னை பாபா காக்க !

முன்னர் பின்னர் வினைகள் நீக்கி
என்னை சாயி என்றும் காக்க !
இல்லற வாழ்வில் எல்லா நலமும்
இறைவா தந்து எம்மைக் காக்க !
தேடும் மேன்மை யாவும் தந்து
தீர்க்க முடனே சாயி காக்க !
நாடும் பிள்ளைச் செல்வம் முதலாய்
நலங்கள் யாவும் தந்து காக்க !
எண்ணிரு செல்வம், இசைந்த வாழ்வு,
புண்ணிய நலங்கள், பொலிவுடன் அருள்க !

தந்திரம், மந்திரம், தம்பனம், மாரணம்
சிந்தை மயக்கும் மோகனம், வசீகரம்,
துன்பம் அளிக்கும் ஆரணம், கருடணம்,
வம்பை வளர்க்கும் சாடனம், பேதனம்,
எந்த வடிவில் எவ்வா றாயினும்,
எதுவும் என்னை அணுகா திருக்க,
உந்தன் நாமம் உருகியே சொல்ல
வந்த வினையை வாட்டியே ஒழிப்பாய் !
துட்ட தேவதை, தொடரும் பிசாசு,
கெட்ட மிருகம், கெடுக்கும் உறவு,

Koviloor Digital Library

இட்ட ஏவல், ஏமபதை யாவையும்,
சுட்டு எரித்து என்னை காப்பாய் !
அஸ்திரம் சஸ்த்திரம் எதுவே ஆயினும்
அடங்கா ஊழிப் பெரும்பகை ஆயினும்
கத்தும் கடலாய்க் கொடுமை சூழினும்
சத்திய சாயி நித்தம் காக்க !
எண்ணும் போதும் இயங்கும் போதும்
உண்ணும் போதும் உறங்கும்போதும்
பண்ணும் செயல்கள் யாவிலு மிருந்து
பலமுடன் பாபா பாங்குடன் காக்க !

சுழலும் கோள்கள் செயலால் என்னைச்
சூழும் துயரம் நீக்கி அருள்க !
பழகும் காலம் எதுவே ஆயினும்
பரிவுடன் சாயி என்னைக் காக்க !
கசிந்து உருகிக் கன்னித் தமிழில்
கடவுள் மீது கவிகள் பாட
இசைந்து சாயி தமிழாம் அமுதை
இயல்பாய் எனக்கு என்றும் அருள்க !
பிறந்த கடனை முழுமை செய்யச்
சிறந்த குருஉன் பாதம் பணிந்தேன் !

நிறைந்த வாழ்வு யாது ஆயின்
நிறைவு செய்யும் கடமை ஆகும் !
செய்ய வேண்டிய கடமை யாவும்
செம்மை யாகச் செய்ய அருள்வீர் !
மங்கல நலன்கள் யாவும் தந்து
மனையறம் விளங்க மாயி அருள்வீர் !
உங்கள் அருளால் கவசம் பாடி
உங்கள் அருளை யாசிக் கின்றேன் !
உற்ற வழிகள் யாவும் அருளிச்
சத்திய சாயி எம்மைக் காப்பீர் !

Koviloor Digital Library

பூட்டி மந்திர் வாசா போற்றி !
புண்ணியம் அருளும் நேசா போற்றி !
வாட்டும் துயரம் தீர்ப்பாய் போற்றி !
வளங்கள் நலங்கள்அருள்வாய் போற்றி !
அன்னை தந்தை ஆனாய் போற்றி !
அன்புக் குருவே உன்பதம் போற்றி !
உருகும் பக்தர் உணர்வே போற்றி !
உண்மை ஞான ஒளியே போற்றி !
திருவாம் உன்பதம் போற்றி ! போற்றி !
தெய்வ வடிவே போற்றி ! போற்றி ! 100

சற்குரு நாதா சரணம் ! சரணம் !
சச்சிதா னந்தா சரணம் ! சரணம் !
அற்புத ஒளியே சரணம் ! சரணம் !
அன்பே அருளே சரணம் ! சரணம் !
நித்திய சாயி சரணம் ! சரணம் !
நிர்மல வடிவே சரணம் ! சரணம் !
பொற்பதம் பணிந்தோம் சரணம் ! சரணம் !
புண்ணிய ரூபா சரணம் ! சரணம் ! 108

Koviloor Digital Library



நவராத்திரி நாயகி - மீனாட்சி தோத்திர மாலை

ஜெய ஜெயதேவி ஜெய ஜெயதேவி ஜெய ஜெயதேவி சரணம் (ஜெய)

அரிஅரன் போற்றும் அழகிய வடிவே !
அங்கயற் கண்ணி ஆன வளே !
குருபரன் பிள்ளைத் தமிழனைக் கேட்டுக்
குழந்தை வடிவில் வந்த வளே !
மகிடனை வெல்ல மாதவம் செய்த
மாதருள் மூத்த மலை மகளே !
விகடனாய்த் திரியும் என்னையும் காத்து
வித்தகம் அருள்வாய் கலைமகளே ! (ஜெய)

பாண்டியன் செய்த வேள்வியின் பயனாய்ப்
பாரினில் வந்த பைங்கிளியே
வேண்டிடும் பக்தர் வேண்டிடும் யாவும்
விரைந்தே அளிக்கும் அருள்நி தியே !
தூண்டிலில் மீனாய்த் துடித்திடும் மைந்தன்
துயரம் தீர்ப்பாய் தூயவளே !
மாண்பினைத் தந்தும் மாட்சிமை தந்தும்
மைந்தனைக் காப்பாய் திருமகளே ! (ஜெய)

Koviloor Digital Library

திரைகடல் அலையாய்க் கார்குழல் அலையத்
திவ்விய வடிவம் கொண்ட வளே !
கரைதனை அறியா வினைகளை வெல்லக்
கருணை புரிவாய் என் தாயே !
திருமலை ராயன் மடிதனில் அமர்ந்து
தீந்தமிழ் கேட்ட தாரகை யே !
ஒருதரம் வந்தென் கவிதனைக் கேட்பாய் !
உன்னத மான மலைம கனே ! (ஜெய)

கொலுவினில் வைத்த பொம்மையைப் போலக்
குழந்தை நானும் வாழு வதோ !
அழுதிடும் சவலைப் பிள்ளையைப் போல்
அடியவன் வாடிக் கலங்குவதோ !
பழுதுகள் ஆயிரம் நான்கொண்ட போதிலும்
பாவி நானுன் மகனன் றோ !
தொழுகிறேன் தாயே ! அழுகிறேன் தாயே !
துயர்களைக் களைய வரு வாயே ! (ஜெய)

அறுபடைக் குமரன் சரவண முருகன்
அசுரரை வெற்றி கொள்ளுதற்கே
திறமிகு சக்தி வேலதைத் தந்து
தேவரைக் காத்த நாயகி யே !
குறையுடை மகனாய்க் குவலயந் தன்னில்
மகனெனைப் படைத்தது ஏனம் மா?
நிறைவினைத் தருவாய் ! நிர்மல வடிவே !
நீள்விழி நயனம் கொண்ட வளே ! (ஜெய)

கடைவழி செல்லும் ஒருசிறு மழலை
காண்பது யாவும் கேட் டழுதும்,
தடைபல கூறித் தக்கதை மட்டும்
தாயவள் தந்து காத்திடு வாள் !
இடைவெளி இன்றிப் பலப்பல வேண்டும்
எளியவனுன்றன் மகன் நானும்
திடமுடன் வாழத் தக்கதை மட்டும்
தந்தெனைக் காப்பாய் என் தாயே ! (ஜெய)

Koviloor Digital Library

மலரின் மணமாய் மனதுள் மலர்வாய்
மங்கை உமையவள் என் தாயே !
புலரும் காலைப் பொழுதின் சுடராய்
புத்தொளி தருவாய் என் தாயே !
வளரும் தமிழாய் வாழ்வின் சுவையாய்
வளங்கள் வழங்கி அருள் தாயே !
பலரும் போற்றிப் புகழும் வாழ்வைப்
பாலன் எனக்கும் அருள் வாயே ! (ஜெய)

கோவிலின் நடுவே கொலுவென நின்று
குவலயம் காக்கும் திருமகளே !
ஆவுடை நாதன் ஆவியிற் கலந்து
அன்பினைச் சொரியும் பூ மகளே !
பூவிழி மலரப் புன்னகை புரியும்
புண்ணிய வடிவே என் தாயே !
பாவியாம் நானும் பரகதி அடையப்
பரிவுடன் அருளைப் பொழி வாயே ! (ஜெய)

மதுரையாம் பதியை மகிழ்வுடன் ஆளும்
மரகத வடிவாம் மீனா ளே !
சதுர் மறை போற்றும் சங்கரி உமையே !
சத்திய வடிவம் கொண்டவளே !
விடுகதை போலும் வாழ்வியற் புதிரின்
விடைகளாய் ஆன கார ணியே !
தொடர்கதை ஆகும் இடர்களும் தீரத்
தொடர்ந்த தெனைக் காப்பாய் பூரணியே ! (ஜெய)

அமரரும் மீள அசுரரும் சாய
அற்புதம் அன்று புரிந்த வளே !
நவநா ளிரவு விரதமி ருந்து
நானிலம் தன்னைக் காத்த வளே !
தவமாய்க் குமரி முனைதனில் நின்று
தர்மம் காக்கும் பகவ தியே !
சிவமாய்ச் சுடராய் என்னுள் விளங்கிச்
சிந்தையில் நிறைவாய் தூய வளே ! (ஜெய)

Koviloor Digital Library

வந்தது யாவும் உன்னருள் என்று
வணங்கி யே நானும் வாழ்கின்றேன் !
சென்றது யாவும் உன்செயல் என்று
சிந்தை யில் எண்ணிச் செல்கின்றேன் !
நன்றெனை என்னை நாயகி காப்பாய்
என்றே நம்பி வாழ்கின்றேன் !
கன்றென உந்தன் காலடி வீழ்ந்தேன்
கருணை புரிவாய் என் தாயே ! (ஜெய)

சேரென வினைகள் சூழுமென் மனதில்
செந்தா மரையாய் நீ மலர்வாய் !
காரிருள் மறையத் தோன்றிடும் கதிராய்க்
கனலாய் என்னுள் நீஒளிர் வாய் !
கூரென விழிகள் வேலென மின்னக்
குற்றம் குறைகள் நீ களைவாய் !
பாரினில் உந்தன் மகன்படும் துயரம்
யாவையும் போக்கி நீ அருள் வாய் ! (ஜெய)

தந்தை தாயைப் பிரிந்த பிள்ளை
தன்னந் தனியே தவிப்பது போல்,
சந்தை உலகில், மந்தை உறவில்
சலித்துச் சோர்ந்து நான்நின் றேன் !
கந்தன் வேலன் இவர்கள் உடனே
காளை நானுன் மகனன் றோ !
விந்தை இதனை அறிந்த பின்னும்
வாரா திருத்தல் முறைதானோ ! (ஜெய)

சொந்தச் சுமையைத் தோளில் ஏற்றிச்
சோர்ந்து நானும் நடக் கின்றேன் !
பந்தச் சுமையை நெஞ்சில் ஏற்றிப்
பாலன் நானும் சுமக்கின்றேன் !
எந்தச் சுமைகள் ஆன போதும்
எல்லாம் சுமக்கும் இன மானேன் !
எந்தன் தாயே என்னை மட்டும்
என்றும் சுமையாய் எண் ணாதே ! (ஜெய)

Koviloor Digital Library

சலசல வென்று சலங்கைகள் கொஞ்சச்
சங்கரி உமையே வந்தருள் வாய் !
கலகல வென்று கைவளை சிணுங்கக்
கயல்விழி மாதே நீவரு வாய் !
பளபள வென்றுன் இருவிழி மின்னப்
பாவை நீயும் எதிர் வருவாய் !
மளமள வென்று மங்கலம் பொங்க
மாதா நீயும் எமக் கருள்வாய் ! (ஜெய)

மானுட வடிவில் மதுரை வந்து
மனையறம் காத்த மலைமகளே !
நானுமுன் அருளை நலமுடன் வேண்ட
நற்கதி தருவாய் பூமகளே !
ஊனமில் மனமும் உறுதியா முடலும்
உன்னடி பணியும் உயர்குணமும்
வேணும் என்னாளும் என்றே பணிந்தேன்
விரைந்து அருள்வாய் என்தாயே ! (ஜெய)

டமருக நாதம் தாளம் போடத்
தாண்டவம் புரிவோன் காதலியே !
பகரும் புலவர் பைந்தமிழ்ச் சொல்லில்
பண்பாய் ஒளிரும் பூங்கொடியே !
நகரம் மகரம் சிகரம் வகரம்
யகரம் யாவும் ஆனவளே !
நிகரில் லாத சிவமய மாகி
நெஞ்சில் மலரும் நிர்மலமே ! (ஜெய)

பாலன் இராம நாதன் உன்மேல்ப்
பாடல் பாடிப் பணிகின்றேன் !
ஆவல் தீர அன்னை உந்தன்
அன்பில் நானும் கனிகின்றேன் !
மேவும் அன்புப் பாசச் சுடரில்
மெல்ல மெல்லக் கரைகின்றேன் !
பாவம் இந்தப் பாலன் என்று
பரிவு காட்டி அருள்வாயே ! (ஜெய)

Koviloor Digital Library



அருள் வேண்டற் பதிகம்

கூடல் மாநகராளும் கொற்றவை புகழ்பாடக்
குழந்தை நானோடி வந்தேன் !
குறைவிலா அருளோடு குணமிகு கற்பகம்
கூர்மதி தந்து அருள்க !
ஆடல்புரி சிவனாரின் அகமாளும் என்தாயை
அன்புடன் பாட வந்தேன் !
அற்பனென் கவிதையை அற்புதம் என்றாக்கி
அருள்புரிய வேணு மைய்யா !
தேடுமுயர் ஞானமும் தெவிட்டாத யோகமும்
தேவியுன் அருளே என்று
தெளிந்திடும் சித்தமும் தேர்ந்திடும் புத்தியும்
தேவி நீ தந்து அருள்க !
பாடுமென் பாடலைப் பாமாலை ஆக்கியுன்
பாதமலர் சூடு கின்றேன் !
பரிவோடு உன்மகன் பாடலைக் கேட்டுஎன்
பாடுகள் போக்கி அருள்க !

Koviloor Digital Library

சிறுமடல் மல்லிகை அதன் மணம்போல என்
சித்தத்தில் மணக்கும் தாயே !
ஒருமடல் வரைகிறேன் எனதிடர் யாவையும்
ஒருகணம் கேளு நீயே !
ஒருவழிப் பாதையில் நெடுவழிப் பயணமாய்
ஓய்வின்றி உழலு கின்றேன் !
நடுவழிப் பாதையில் நான்சோர்ந்து போயில்
நலமுடன் வந்து காப்பாய் !
அறிவிலா மூடனாய் அன்பிலா மூர்க்கனாய்
அவனியில் வாழு கின்றேன் !
தெளிவிலா வேதாந்தம் பலபேசி என்வாழ்வைத்
தேய்பிறை ஆக்கி விட்டேன் !
பலதுயர் பட்டபின் அவைபோக்கும் மருந்து உன்
பாதமலர் என்று கண்டேன் !
பரிவோடு உன்பாதம் என்நெஞ்சில் வைத்துஎன்
பாவங்கள் போக்கு தாயே !

மடிதனில் உதைத்தாலும் மாரிலே மிதித்தாலும்
மகிழ்வோடு கொஞ்சும் தாயாய்
மனதிலே நினைத்தாலும் மகிழ்வோடு துதித்தாலும்
மகிமைகள் அருளும் தாயே !
கொடிதான ஊழ்வினைத் தொடராலே உலகினில்
குமுறியே வாடுகின் றேன் !
கொற்றவை உன்பாதம் பற்றியே அழுகிறேன்
குறைகளைப் போக்கி அருள்க !
மடிகின்ற காயத்துள் மாயையாம் ஆசைகள்
மலைபோல வளரு தம்மா !
மமதையாம் ஆணவப் பேய்களும் மனதுள்ளே
மகிழ்வோடு ஆடுதம்மா !
தொடர்கின்ற பிறவியும் தொலையாத வினைகளும்
தொடர்ந்துமே பின்னுதம்மா !
தூயநின் பாதத்தைச் சேய்நானும் பற்றினேன்
துலங்கிட அருளு மம்மா !

Koviloor Digital Library

இதயமும் கசிந்தோடி இருவிழி நதியாகி,
இவைகூடும் சங்கமத்தில்
உதயத்தின் ஒளிபோல் வினையிருள் நீக்கிடு
ஒப்பிலா எந்தன் தாயே !
அழுதிடும் பிள்ளையின் அழுகையின் தரங்கொண்டு
அதுபோக்கும் அன்னை போலத்
தொழுதிடும் உன்மகன் தொழுகையின் தரங்கண்டு
துயரங்கள் போக்கு தாயே !
வேரின்றி மரமில்லை ! விலையின்றிப் பொருளில்லை !
விதிவென்ற மனிதரில்லை !
நீரின்றி உலகில்லை ! நிலவின்றி வானில்லை !
நின்னருட் கிணை யுமில்லை !
நினைவின்றி மனமில்லை ! நீயின்றி நானில்லை !
நேரிலே வருவ தென்று?
தாயின்றித் தவிக்கின்ற சேயாக அழுகின்றேன் !
தயவோடு வந்து காப்பாய் !

கருவளர் நிலையிலும் மடிவளர் நிலையிலும்
குழவிதன் தாயை உணரும் !
தரைதவழ் நிலையிலும் தளிர்நடை அசைவிலும்
பிறகுற்றம் கண்டு அறியும் !
மதிவளர் நிலையிலும் மனைமாட்சி வரவிலும்
உலகியல் மோகம் வளரும் !
விதிவளர் நிலையிலும் வினைபடு நிலையிலும்
உனதருள் தேடி அலையும் !
கடைவழி திரியுமோர் தெருவழி நாயெனக்
கடையனும் அலையு முன்னர் (உன்)
கடைவிழி அசைவினால் எனக்கருள் வழங்குவாய்
கடையூரில் வாழும் தாயே !
விடைவழி அறியாத துயர்நிலை ஒழியவும்
விரைவினில் வருக தாயே !
விடைதனில் ஏறிடும் சிவனுடன் கூடிநீ
விரைவுடன் அருள்க தாயே !

Koviloor Digital Library

வலைகளாய் உறவுகள் – அலைகளாய்ப் பிறவிகள்
முடிவுநான் காண்ப தென்று?
மலைகளாய் ஆசைகள் – தளைகளாய் என்வினை
இவைகளை வெல்வ தென்று?
நிலையிலா மனத்துடன் துணிவிலா குணத்துடன்
எனைநீயும் படைத்த தேனோ?
அழிவிலா உன்பதம் அடையநான் சம்மதம்
அதற்கொரு வழியு மென்ன?
அறிவிலா உன்மகன் படும்துயர் கண்டுநீ
அசைவிலா திருக்கலாமோ?
ஒருசிறு நொடியேனும் உன் மகன் எனை நினை
என்நொடி யாவும் தீரும் !
இருவினை மும்மலம் இவையெலாம் ஒழிந்திட
உனதருள் ஒன்று போதும் !
இருகரம் கூப்பியே அழுகிறேன் உன்மகன்
இறைவி நீ அருள வருக !

நிதிகேட்டு வந்தாலும் கதிகேட்டு வந்தாலும்
நிறைவோடு அருளும் தாயே !
மதிகெட்டுப் போனவன் மனம்விட்டு அழுகிறேன்
மனம்கனிய வேணும் தாயே !
சுதிகெட்டுப் போனாலும் லயம் கெட்டுப் போனாலும்
இசைகெட்டுப் போகும் தாயே !
விதிவிட்ட வழியென்று வினைமுற்ற வாழ்வதால்
விளையுமோ நன்மை தாயே?
பரிவட்டம் பல்லக்கு பகட்டான பெருவாழ்வு
பாரினில் மாயை அம்மா !
இளவட்டம் மாறியும் நரைவட்டம் கூடியும்
மனமாற்றம் இல்லை அம்மா !
தொடரட்டும் உன்னருள் ! தொலையட்டும் என்வினை !
துரிதமாய்ச் செயல்படு அம்மா !
மலரட்டும் என்மனம் ! படரட்டும் பேரொளி !
மகனெனக் கருள்புரி அம்மா !

ஒருமாரில் அமுதுண்டு மறுமாரில் கால்வைத்து
மகிழ்வோடு உதைத்தபோதும்
இருபாதம் தளிர்தொட்டு இதழாலே முத்தாரம்
தருகின்ற அன்னை போலப்
பலவாறு நான்கெட்டுப் பண்பாடு இல்லாமல்
பதராக அலைந்த போதும்
பரிவோடு எனைவாழ்த்திப் பாங்கோடு எனைக்காத்துப்
பாசத்தைப் பொழியும் தாயே !
திருவோடு கையேந்தும் ஈசற்கு அருள்கின்ற
திருவான அன்னை உமையே !
திருஏடு வைகையில் எதிர்நீச்சல் போடவும்
திறமோடு அருளும் தாயே !
மருளோடு மாயையில் மயங்கிடும் உன்மகன்
மனதிலே வந்து நீயும்
அருளோடு நலந்தந்து அன்போடு வளந்தந்து
அகந்தனை ஆளு வாயே !

காதோரம் நரைவிழும் காலங்கள் தாண்டியும்
கசடனாய் வாழ்ந்த போதும்
கருத்தினில் ஒன்றையும் வாக்கினில் ஒன்றையும்
கள்ளமாய்க் கொண்ட போதும்
வேதாளம் மரமேறும் கதைபோல வாழ்வினை
வீணாகக் கழித்த போதும்
விளையாட்டு போலவே வாழ்வினை நானெண்ணி
விதிவழி சென்ற போதும்
ஏதேனும் காரணம் பலசொல்லித் தோல்வியை
இயல்பாகக் கொண்ட போதும்
துணையாக வருகின்ற நட்பையும் உறவையும்
துச்சமாய மதித்தபோதும்
மாதாவுன் திருவடி மகிமையை உணர்ந்துநான்
மனதாரத் துதித்த போது
மகிழ்வான உன்பார்வை என்மீதில் படர்ந்திட
மங்களம் பெற்று உய்வேன் !

Koviloor Digital Library

அன்பான அகந்தனை ஆலயம் ஆக்குவேன் !
அன்னையை அங்கு வைப்பேன் !
ஆதாரப் பூக்களை நாடியால் கட்டுவேன் !
அன்னையுன் பாதம் வைப்பனே !
பண்பான கோசங்கள் ஐந்தையும் திருத்துவேன் !
பஞ்சமுக தீபம் செய்வேன் !
பாதார விந்தங்கள் போற்றியே உருகுவேன் !
புலன்களைப் பூட்டி வைப்பேன் !
நன்றான காயத்தை திரியாக ஆக்குவேன் !
நல்லன்பை நெய் ஆக்குவேன் !
நாவார மனதார என்தாயைப் போற்றுவேன் !
நற்றமிழ்க கவி பாடுவேன் !
ஒன்றான ஆன்மாவை ஒளியாக ஏற்றுவேன் !
உருகியே நானும் பணிவேன் !
உயிரான என்தாயை உணர்வாலே கண்டுநான்
ஒன்றாகிக் கலந் திருப்பேன் !

உயிர்மூச்சு எனைவிட்டு ஓடிடும் வேளையில்
உன்நாமம் கூற வேண்டும் !
உடல்விட்டு உணர்வுகள் ஒடுங்கிடும் வேளையில்
உன்னருள் நாட வேண்டும் !
உறவெனும் வலைகளில் சிக்கியே தவிக்கையில்
உன்பாதம் பற்ற வேண்டும் !
உத்தமப் பத்தினி மனையாளின் கூட்டிலும்
உன்அருள் எண்ண வேண்டும் !
உலகியல் வாழ்வினில் ஒவ்வொரு நிலையிலும்
உன்புகழ் பாட வேண்டும் !
உன்மத்தம் கொண்டாலும் ஊழ்வினை வந்தாலும்
உன்னையே போற்ற வேண்டும் !
உடலாலும் மனத்தாலும் உணர்வாலும் செயலாலும்
உன்னையே கதியாய் எண்ணி,
உருகிடும் நிலைதந்து ஒளியாக நீ வந்து
உளமெலாம் நிறைய வேண்டும் !

Koviloor Digital Library

உடலென்ற கூட்டுக்குள் உயிரென்ற ஒருபறவை
ஓயாது வந்து போகும் !
உணர்வென்ற காட்டுக்குள் உளமென்ற ஒருயானை
ஓயாது நொந்து வாழும் !
கடலென்ற பிறவிக்குள் கணக்கின்றி வீழ்ந்துமே
காயமும் நைந்து சாகும் !
கன்மமாம் வினைகளும் கவனமாய்ச் சூழ்ந்துமே
கடைசிவரை சிந்துபாடும் !
கடமைகள் மறந்துமே கானலில் உழன்றுமே
கவலையில் மனமும் வாழும் !
கனிவான உன்னருள் அதைமட்டும் நாடாமல்
காலங்கள் பறந்து போகும் !
தடம்மாற வைக்கின்ற ஆணவச் சிந்தனை
தடையாக வந்து சேரும் !
தயவோடு உன்பாதம் அதைமட்டும் நாடினால்
இவையாவும் மாய்ந்து போகும் !

மழைவளம் செழிக்கவும் மனையறம் நிலைக்கவும்
மாதரசி அருள வேண்டும் !
மொழிவளம் சிறக்கவும் முயற்சிகள் பலிக்கவும்
முக்கண்ணி அருள வேண்டும் !
வழிவழி வருகின்ற வாழ்வியல் மேன்மைகள்
வற்றாது பெருக வேண்டும் !
வருந்துயர் போகவும் வளமைகள் பெருகவும்
வடிவரசி அருள வேண்டும் !
மதவெறி இனவெறி மொழிவெறி இவையெலாம்
மடிந்துமே போக வேண்டும் !
மானுடம் உயரவும் மாநிலம் செழிக்கவும்
மங்கைநீ அருள வேண்டும் !
வேணுமுன் திருவடி என்னெஞ்சில் என்றுநான்
வேண்டியே வாழ வேண்டும் !
வேணுகோபாலனின் சோதரி வந்துநல்
வெற்றிகள் அருள வேண்டும் !

Koviloor Digital Library

மீனாட்சி தோத்திரமாலை

நடை : ஜெய ஜெய தேவி ! ஜெய ஜெய தேவி !
ஜெய ஜெய தேவி ! சரணம் ! (ஜெய)
ஜெய ஜெய தேவி ! ஜெய ஜெய தேவி !
ஜெய ஜெய தேவி ! சரணம் ! (ஜெய)

ஆதி சக்தி ! அன்பே சக்தி !
அகிலம் யாவும் சிவசக்தி !
சோதிசக்தி ! சூட்சுமி சக்தி !
சொக்கன் மயங்கும் எழில்சக்தி !
வேதசக்தி ! யோகசக்தி !
வினைகள் மாய்க்கும் ஜெயசக்தி !
நாதசக்தி ! ஞானசக்தி !
நர்த்தனம் புரிவோன் உயிர்சக்தி ! (ஜெய)

ஓதும் தமிழின் உயிராய் விளங்கும்
உன்னதமான உயர்சக்தி !
யாதும் இறைவன் அருளே என்போர்
மனதுள் வாழும் மாசக்தி !
பாடும் புலவர் நாடும் மேன்மை
பாங்கா யருளும் ஓம்சக்தி !
தேடும் மேன்மை யாவும் அருளும்
தேவியுந்தன் அருட்சக்தி ! (ஜெய)

சோதி ஆனாய் ! சுடரும் ஆனாய் !
சூட்சுமம் கடந்த வடிவானாய் !
ஆதிஇறையின் துணையும் ஆனாய் !
அன்பில் தாய்மை நிலைகொண்டாய் !
வேதம் நான்கின் முடிவும் ஆனாய் !
விதியை மாற்றும் திறம் கொண்டாய் !
நாதம் ஆனாய் ! கீதம் ஆனாய் ! (ஜெய)
நற்றமிழ் கவியின் சுவை ஆனாய் !

Koviloor Digital Library

விண்ணகந்தன்னில் மின்னிடும் விண்மீன்
எத்தனைகோடி யாரறிவார் ?
என்னகந்தன்னில் மின்னிடும் ஆசை
அத்தனை கோடியும் நீயறிவாய் !
உன்னகந்தன்னில் உன்மகனென்னை
ஒருபொழுதேனும் நீ நினைவாய் !
மண்ணகந்தன்னில் வாடிடும் மைந்தன்
மனக்குறையாவும் நீ களைவாய் ! (ஜெய)

இருவிழி நனைய ஒருமனதாகவுன்
திருவடி பணிந்து தொழுகின்றேன் !
ஒருதரமேனும் ஒருகணமேனும்
ஒருமுறையேனும் கண்பாராய் !
கருவறை தன்னில் கனலென மின்னும்
கயல்விழி கொண்ட என்தாயே !
சிறுவனின் கவியில் மனமது இரங்கிச் (ஜெய)
சீக்கிரம் அருள் வருவாயே !

அலையும் கடலில் விளையும் நுரைபோல்
அடியேன் பிறந்து உழல்கின்றேன் !
நிலையாம் உந்தன் கருணை வேண்டி
நித்தம் புலம்பித் தவிக்கின்றேன் !
தொடரும் பிறவி, படரும் துயரம்,
இடரும் உறவு, இவைதாண்டி
நெகிழும் பக்தி நிலையாம் ஞானம்
நிர்மலயோகம் இவை அருள்வாய் ! (ஜெய)

கருவில் வளரும் மழலை சலனம்
கருத்தில் உணரும் தாய் போல,
அருளை வேண்டித் தவிக்கும் மைந்தன்
துயரம் போக்க இசைதாயே !
பொருளும், வளமும், புகழும் நலமும்
பொருந்த அருளும் என்தாயே !
அருளை வரவாய் எந்தன் வாழ்வில் (ஜெய)
என்றும் வழங்கி அருள்வாயே !

Koviloor Digital Library



அம்மா அருள்புரியே !

விளங்கும் மதுரை நகரினிலே
துலங்கும் ஞான அருள்வடிவே !
கலங்கும் பக்தர் துயரிடரைக்
களைந்து போக்குந் தெய்வமே !
கூடல் மாநகர் ஆளும் பேரொளி !
ஆடல் நாயகன் காதல் நாயகி !
பாடும் பாவலர் நாடும் மாநிதி !
அருள்வடிவானவளே !

வளங்கள் அருளும் பெருநிதியே !
நலங்கள் நல்கும் அருள்நிதியே !
வரங்கள் தந்து எங்களையே !
விரைந்து காக்க வந்திடுவாய் !
சந்தம் கொஞ்சும் எந்தன் பாக்கள் !
உந்தன் பாதம் சேரும் பூக்கள் !
வந்தென் துயரம் அம்மா களைவாய் !
ஒளிவடிவானவளே !

Koviloor Digital Library

புலன்கள் வித்தை புரிந்திடுமோ !
விலங்கு மனமும் வீழ்ந்திடுமோ !
அரங்கம் துயில்வோன் சோதரியே !
பதங்கள் பணிந்தேன் ஆதரியே !
நோயும் நொடியும் உடலின் பாரம் !
வாழ்வும் தாழ்வும் மனதின் சாரம் !
யாவும் உந்தன் அருளால் மாறும் !
கனிவுடன் அருள் புரியே !

குழந்தை வடிவாய் வேள்வியிலே
மலர்ந்த ஞானப் பூங்கொடியே !
சிறந்த யோகப் பேரமுதே !
நிறைந்த வாழ்வை அருள்பவளே !
ஆசைக் கடலில் அலைந்தேன் சோர்ந்தேன் !
பாசச் சிறையில் வீழ்ந்தேன் புரண்டேன் !
நேசக் கரங்கள் தருவாய் அருள்வாய் !
மகனெனக் கருள்புரியே !

உலர்ந்த தஞ்சை நிலம் மகிழ
விரைந்து மழையாய் வருபவளே !
கசிந்து உன்தாள் பணிகின்றோம் !
கனிந்து எம்மைக் காத்திடுவாய் !
வல்லமை வேண்டி வந்தேன் தாயே !
அல்லவை போக்கி அருள்புரிவாயே !
நல்லவை தந்து வாழ்த்திடு வாயே !
திருவடி சரணடைந்தேன் !

Koviloor Digital Library



அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கல்யாணம்

நடை

ஓம் நமச்சிவாய ஓம்
ஓம் நமச்சிவாய (ஓம்)
(ஓதி)

அங்கயற் கண் அம்மையே !
அழகு மதுரைத் தென்றலே !
பொங்கும் கருணை வெள்ளமே !
புலவர் நாடும் அமுதமே !
சங்கம் வைத்த மதுரையில்
என்றும் ஆளும் தெய்வமே !
சங்கரனார் துணைவியே !
சாம்ப சிவன் தலைவியே ! (1)

கங்கை சூடும் நாதன்மேல்
காதல் கொண்ட தேவியே !
மங்களங் கள் அருளுகின்ற
மாலவனின் தங்கையே !
எங்கள் குலம் காத்திடும்
ஏரகனின் அன்னையே !
தங்கி யெந்தன் நாவிலே
தமிழைத் தீட்டு சோதியே ! (2)

வெள்ளியம் பலத்திலே
வித்தை காட்டும் நாதனைத்
தில்லையம் பலத்திலே
தினமும் ஆடும் ஈசனை
உள்ள மென்ற கோவிலில்
ஒளிர வைத்த சக்தியே !
பிள்ளை என்றன் பாடலைக்
கேட்டு அருள் முக்தியே !

Koviloor Digital Library

(பிறப்பு)

பாண்டி மன்னன் செல்வியாய்
பைந்தமிழின் செல்வமாய்
வேண்டி நின்ற வேள்வியில்
விளைந்தாள் தேவி ஜோதியாய் !
காஞ்சனையாள் அன்பிலே
கனிந்தாள் தேவி ஞானமாய் !
வாஞ்சை யுடன் பணிந்தனர்
வானவரும் யாவரும் ! (4)

மூன்று தனம் மேனியில் !
முறுவல் அவள் இதழ்களில் !
கண்ட மன்னன் திகைத்தனன் !
கடவுள் வானில் செப்பினன் !
என்று இவள் கணவனை
எதிரில் இவள் காண்பளோ !
அன்று இவள் ஒரு தனம்
மறையும்' என்று கூறினன் ! (5)

நன்று நன்று என்றுமே
நாட்டோர் யாவும் மகிழ்ந்தனர் !
கன்றைக் கையில் அள்ளியே
காஞ்சனை யும் நெகிழ்ந்தனள் !
ஆயகலைகள் யாவையும்
அழகு மீனாள் கற்றனள் !
மாயவனின் அருளினால்
மங்கைப் பருவம் அடைந்தனள் ! (6)

பாண்டி மன்னன் செல்வியும்
பலரும் போற்றும் வண்ணமாய்ப்
பாண்டி நாட்டின் அரசியாய்ப்
பட்டம் சூட்டிக் கொண்டனள் !
தாண்டித் தடைகள் யாவையும்
தகர்க்க முடிவு செய்தனள் !
பாண்டி மறவர் சூழவே
பகை முறிக்கச் சென்றனள் ! (7)

Koviloor Digital Library

(பகை வெல்லல்)

திசைகள் எட்டும் வென்றனள் !
    தேசம் யாவும் வென்றனள் !
வசைகள் பாடும் ஈனரின்
    வாழ் வொழித்துக் கொன்றனள் !
இசைவு சொல்லிப் பணிந்தவர்
    ஏற்றம் காண அருளினள் !
அசையும் தென்றல் வடிவமாய் !
    அன்னை இமயம் சென்றனள் ! (8)

(ஈசனைக் காணுதல்)

கண்கள் நடுவே கண்ணினைக்
    கொண்ட காந்த வடிவினைக்
கண்ட மீனாள் கண்களில்
    காதல் பொங்கப் பணிந்தனள் !
வெல்ல வந்த தேவியை
    வென்று விட்ட ஈசனும்
மெல்ல இதழ் மலரவே
    தனம் ஒன்று மறைந்ததே ! (9)

(மணம் பேசுதல்)

அண்ணன் மாலும் பிரம்மனும்
    அருமைத் தேவர் முனிவரும்
இந்த நிகழ்வு கண்டதால்
    இன்பம் பொங்க மகிழ்ந்தனர் !
பின்னர் மதுரை மண்ணிலே
    பெருமை பொங்கத் திருமணம்
நல்லபடி முடித்திட
    நாட்டம் கொண்டு விரைந்தனர் ! (10)

(சிவனின் கோலம்)

சுடலைப் பூமிக் காவலன் !
    சுட்ட சாம்பல் மேனியன் !
உடலில் நாகம் அணிபவன் !
    உடுக்கை அவன் இசைக்கலன் !
நீல வானின் பிறைதனை
    நித்தம் சூடும் நிர்மலன் !
சூல பாணி ஆயுதன் !
    சுத்த சக்தி நாயகன் ! (11)

Koviloor Digital Library

புலியின் தோலை அணிபவன் !
புத்தி சித்தம் கடந்தவன் !
கலியை ஒத்த அசுரரைக்
காலால் எத்தி உதைப்பவன் !
கங்கை அணி நாயகன் !
காசி வாசி ஆனவன் !
எங்கும் நாத ரூபமாய்
என்றும் வாழும் தூயவன் ! (12)

கயல் விழியின் அழகினைக்
கண்ட ஈசன் மயங்கினன் !
மயில் அவளைக் கவரவே !
எழில் வடிவம் கொண்டனன் !
சுந்தர னாய் மாறினன் !
சொக்க லிங்கம் ஆகினன் !
கண்ட தேவி மயங்கினள் !
காஞ்சனையும் மகிழ்ந்தனள் ! (13)

(மீனாளின் அழகு)

பச்சை மீனாள் அழகினைப்
பாடத் தமிழை நாடினேன் !
இச்சை யுடன் தேடினேன் !
எழுத வார்த்தை இல்லையே !
உச்சித் திலகம் ஞாயிறு !
உதிரும் பூக்கள் புன்னகை !
மெச்சும் எழில் முகமதி !
மேனி ஒரு பூவனம் ! (14)

கண்ணிரண்டும் கயல்களாம் !
காது மடல் மலர்களாம் !
பெண்ணரசி நாசியும்
பேரழகு வடிவமாம் !
கன்ன மிரு செங்கனி !
கனிந்த இதழ் கோவையாம் !
என்ன அழகு இவளென
ஈசன் தன்னை மறந்தனன் ! (15)

Koolaer Digital Library

செங் கழுத்து சங்குதான் !
    சிவந்த தோள்கள் தந்தம்தான் !
கொங்கை இரு கோபுரம் !
    குறுகும் இடை சிறுகொடி !
தங்கக் கைகள் செம்மலர் !
    தாயின் பாதம் தாமரை !
மங்கை மீனாள் அழகினில் !
    மனதை இழந்தான் ஈசனே ! (16)

அலையும் கூந்தல் அருவியாம் !
    அவளே அழகு வடிவமாம் !
வளையும் வில்லே புருவமாம் !
    வஞ்சி இமை விசிறியாம் !
அழகில் சொக்கி ஈசனும்
    அன்றே சொக்கன் ஆகினான் !
உலகோர் கண்ட தில்லையே !
    இவளைப் போன்ற அழகியை ! (17)

(திருமணக் காட்சி)

தாரை வார்த்துத் திருமணம்
    தக்கபடி செய்திட
நாரணனும் வந்தனன் !
    நந்தி உதவி செய்தனன் !
புரோகித மும் செய்திடப்
    பிரம்ம தேவன் வந்தனன் !
பாரில் மக்கள் யாவரும்
    பக்தியோடு கூடினர் ! (18)

தஞ்சை பூமிக் கீற்றினால்,
    தரணி எங்கும் பந்தலாம் !
மஞ்சள் வாழை மாவிலை
    மதுரை எங்கும் ஒளிருதாம் !
விஞ்சும் எழில் வண்ணமாய்
    வீதி யாவும் விளங்குதாம் !
கொஞ்சும் அழகு வடிவுடன்
    கூடல் நகர் துலங்குதாம் ! (19)

Koviloor Digital Library

இந்திராதி தேவரும்
என்றும் வாழும் முனிவரும்,
சந்திராதி ஞாயிறும்
சகல கோள்கள் யாவையும்
கிம்புருவர் கூட்டமும்
அங்கு வந்து சேர்ந்தனர் !
வம்பு செய்யும் நாரதன்
தானும் அங்கு வந்தனன் ! (20)

செல்வி எழுவர் பாடிடத்
தேவமாதர் ஆடிட
வள்ளி தெய்வ யானையும்
வண்ணவடி வேலனும்
பிள்ளைக் கண நாதனும்
பெருமை பொங்க வந்தனர் !
நல்லமணம் கண்டிட
நாழிகையைப் பார்த்தனர் ! (21)

உரிய நேரம் வந்தது !
உன்னதங்கள் நிகழ்ந்தது !
அரியாம் மாலும் தங்கையின்
அழகுக் கையைப் பற்றியே
பெரிய தெய்வம் ஈசனின்
பிரியக் கையில் சேர்த்தனன் !
உரியபடி தாரையும்
வார்த்து மணம் முடித்தனன் ! (22)

எங்கும் வாழ்த்து முழங்கிட,
எங்கும் வேதம் ஓதிட
எங்கும் மலர்கள் சொரிந்திட
எங்கும் மகிழ்வு பொங்கிட
எங்கும் நிறைவு பூத்திட
எங்கும் அன்பு மலர்ந்திட
மங்கை மீனாள் திருமணம்
மதுரை மண்ணில் நிகழ்ந்தது ! (23)

Koviloor Digital Library

(விருந்து)

செட்டி நாட்டுச் சமையலாம் !
சிறப்பு மிக்க வகைகளாம் !
பட்டி தொட்டி யாவிலும்
பந்தி போட்டு வரிசையாம் !
குன்றுகளாய்ச் சாதமாம் !
குளம் குளமாய் கறிகளாம் !
கூடல் மதுரை நகரிலே
குறை விலாத அன்னமாம் ! (24)

(வைகை வரவு)

செய்த உணவு மிகுதியாய்ச்
சேர்ந்து விட்ட தன்மையால்,
உய்ய வழிகள் சிவனிடம்
உரிமை யோடு கேட்டனர் !
சிவகணத் தில் ஒருவனைச்
சிவனும் அங்கு அனுப்பிட
ஒரு கணத் தில் யாவையும்
உண்டு ஏப்பம் போட்டனன் ! (25)

தண்ணித் தாகம் எடுக்கவே
தவித்து அவன் அலைகையில்,
எண்ணம் நிறை வேற்றிட
ஈசன் மனம் வைத்தனன் !
கையை வைக்கச் சொல்லியே
வைகை வரச் செய்தனன் !
வைகை பெருகி வந்ததால்
மதுரை மண்ணும் மகிழ்ந்தது ! (26)

(விடை பெறுதல்)

மொய் எழுதும் வரிசையில்
வையம் யாவும் நின்றது !
கையில் பெற்ற தாம்பூலம்
கடவுள் தந்த பெருவரம் !
அய்யன் அம்மை திருமணம்,
அதனைக் கேட்ட யாவரும்,
மெய்யாய் மேன்மை பெறுவரே !
மேலும் நன்மை அடைவரே ! (27)

Koviloor Digital Library

மங்களம்

அம்மை அப்பன் திருமணம்
அகிலம் போற்றும் திருமணம் !
இம்மை மறுமை நலன்களை
என்றும் அருளும் திருமணம் !
உண்மையோடு கேட்டவர்
ஊழை வெல்வர் நிச்சயம் !
நன்மை அவர் வாழ்விலே
நாளும் சேரும் சத்தியம் ! (28)

சுபம் !

வருகைப் பதிகம்

அறுமுகன் ஆனவனே ! கரிமுகன் சோதரனே !
ஒருமுகம் ஆகஉந்தன் திருமுகம் நாடுகின்றேன் !
மயில்முகம் முன்தோன்ற(வுன்) மலர்முகம் உடன்தோன்ற
அயில்வடி வேலேந்தி அழகுடன் வருவாயே !

குஞ்சரி இடையோடும், குறமகள் இதழோடும்
கொஞ்சிடும் மணவாளா ! குவலயப் பரிபாலா !
தஞ்சமென் றுன்இருதாளைத் தயவுடன் பணிகின்றேன் !
விஞ்சிடும் அன்புடனே விரைவினில் வருவாயே !

Koviloor Digital Library

தகதக மயிலேறித் தடைதகர் கொடியேந்தி
இகபர நலமருள எனதிடர் நீகளையச்
சுகநல வளமருளச் சூட்சும வேலேந்திப்
பகவதி பாலகனே ! பாங்குடன் வருவாயே !

அரிதிரு மருகோனே ! அரன்விழிச் சுடரோனே !
கரிமுகற் கிளையோனே ! கிரிபல வளர்வோனே !
அருந்தமிழ் ஆர்வலனே ! அழகிய வேலவனே !
வருந்திடும் எனைஆள வடிவுடன் வருவாயே !

சதுர்முகன் பணிபவனே ! சதுர்மறை நாயகனே !
சதுர்புஜ மாலவனின் சாகச மருமகனே !
சதுரங்க வாழ்வினிலே சதிபகை போயொழியச்
சதுர்வேல் கரமேந்திச் சண்முகா வருவாயே !

எண்திசை சூழுகிற என்வினைப் பகைமாள
உன்திசை நான்பணிந்து உருகியே கவிபாட
விண்மிசை மயிலேறி வேலதைக் கரமேந்தி
என்கலி யதுதீர இறைவனே வருவாயே !

பன்முக வாழ்வினிலே பலமுகம் கொண்டுழன்றேன்
உன்முகம் ஒன்றினையே உள்முக மாக எண்ணிச்
சண்முகா உன்னழகில் சகலமும் நான்மறந்தேன் !
இன்முகம் நீகாட்டி எனைஆள வருவாயே !

உருகிடும் அடியவரின் உளமெலாம் நிறைபவனே !
மருகிடும் பக்தர்களின் மருளினைக் களைபவனே !
அருகினில் வந்தெனது அவலங்கள் போக்கிடவே
முருகெனும் பேரழகே ! மூர்த்தியே வருவாயே !

ஒருபெரும் வேலெறிந்து கிரிபல பிளப்போனே !
ஒருஎழில் மயிலேறி உலகெலாம் வருவோனே !
ஒருதனிக் கொடியேந்தி ஊழ்வினை களைவோனே !
ஒருமுறை என்மனதுள் ஒளியென வருவாயே !

Koviloor Digital Library

குறமகள் தேனிதழின் சுவைதனை அறிவதற்குப்
பரண்மனை கீழிருந்து சேவகம் புரிபவனே !
திறமுடன் வேலெறிந்து தேவரைக் காத்தவனே !
பரிவுடன் எனைஆளப் பழனியே வருவாயே !

தேவரும் முனிவர்களும் தெளிர்ந்தநல் ஞானிகளும்
யாவரும் புகழ்ந்தேத்தும் ஓவியப் பேரொளியே !
ஆவலும் மிகக்கொண்ட டியவன் பணிகின்றேன் !
சேவலாம் கொடியேந்திச் சீக்கிரம் வருவாயே !

தண்டொடு பழனியிலே தனிமையில் நிற்பவனே !
பெண்டுகள் இருவரையும் பெருமகன் மறந்தாலும்
கன்றெனை மறப்பதுவோ ! கந்தனே சரியாமோ !
நன்றெனைக் காத்திடவே நலமுடன் வருவாயே !

உருவினில் அழகாகி, உணர்வினில் கனலாகி
அருளினில் நிறைவாகி அருணையின் ஒளியாகி
குருசிவன் குருவாகிக் குவலயம் காப்பவனே !
நிறைவுடன் எனைக்காக்க நிர்மலா வருவாயே !

முன்வினைப் பயன்யாவும் மூர்க்கமாய்ச் சூழ்ந்தாலும்
உன்பதம் நான்பணிந் துருகிடும் வேளையிலே
என்குரல் அதுகேட்டு இருதுணை புடைசூழக்
கன்றெனைக் காத்திடவே கடுகியே வருவாயே !

பிணியினால் உடல்சோரப் பெருமகன் உனைநாட
நனிபெரும் மயிலேறி நலமுடன் எனக்கருளக்
குணமிகு வள்ளியுடன் குழவியென் இடர்களைய
மணமிகு மலர்சூடி மகிழ்வுடன் வருவாயே !

கனவிலும் நனவிலுமுன் கழல்களை நான்பணிவேன் !
மனதிலும் செயலிலும் உன் மலரடி நான் தொழுவேன் !
எனதெனும் மமதையினை இறைவனே நான் களைவேன் !
குணமிகு மயிலேறிக் குமரனே வருவாயே !

சனியுடன் கோள்யாவும் சேர்ந்தெனை வதைத்தாலும்
கனிவுடன் முருகாவென் றுனதடி நான்பணிய
தனிமயில் மீதேறித் தயவுடன் எனைக்காக்கத்
துணையிரு மயிலுடனேத் துரிதமாய் வருவாயே !

Koviloor Digital Library

மந்திர தந்திரமும் மாயையாம் வித்தைகளும்,
எந்திர சூனியமும் ஏவலும் ஏசல்களும்
எந்தனைச் சூழாமல் எந்தையே நீ காக்கச்
சுந்தர மயிலேறிச் சுடரென வருவாயே !

சிக்கலில் வேல்வாங்கும் செந்திலம் பதிவாழ்வே !
தெக்கணம் ஆளுகிற தென்னவன் திருமகனே !
இக்கலி யுகந்தனிலே என்கலிதனை நீக்கி
சிக்கலைப் போக்கிடவே சீக்கிரம் வருவாயே !

வினைவழிச் சாபங்களும் விதிவழிச் சோகங்களும்
எனைவழி மறித்தாலும் உனைவழி படும்போதில்
உடன்வழித் துணையாகி உன்னத மயிலேறித்
திடவழி எனக்கருளத் தெய்வமே வருவாயே !

தையலர் இருவருடன் தணிகையில் வாழ்பவனே !
பொய்வளர் பூமியிலே புழுவென வாழுகிறேன்
மெய்வளர் உயர்ஞானம் மேன்மையாய் எனக்கருளத்
தையலர் துணையோடு தயவுடன் வருவாயே !

தென்பரங் குன்றமதில் திகழ்கிற வடிவழகா !
என்மனக் குன்றமதில் எழுந்தருள் சிவபாலா !
கண்மணி ஆனவனே ! கார்த்திகை பாலகனே !
என்வினை அதுதீர எழிலுடன் வருவாயே !

கழல்அணி திருவடியும் கவின்மிகு எழில்முகமும்
இடைஅணி வெண்துகிலும் எழில்மிகு திருமார்பும்
என்மனத் திரைவானில் என்றுமே ஒளிரும்படி
சண்முகப் பேரழகே சரவணா வருவாயே !

Koviloor Digital Library

வேல்முருகா ! வேல் !

வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்வேல் !
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்வேல் !

ஈசனாரின் தோளில் ஏறிப் பேசுவது மந்திரம் !
மாசிலாத வள்ளிமாரில் மகிழுவதுன் தந்திரம் !
பாசங்கொண்ட பக்தருக்கு அருளுவது உன்திறம் !
வாசியோக வித்தைகளின் சாகரமே சுந்தரம் !

நாடிமூன்றின் நடுவினிலே சோதியாக ஒளிர்பவன் !
நல்லஆறு சக்கரத்தில் நர்த்தனங்கள் புரிபவன் !
ஓதுகின்ற செந்தமிழில் ஓவியமாய் மிளிர்பவன் !
உள்ளமென்ற கோவிலிலே தெய்வமாகி அருள்பவன் !

வேலெடுத்து சூரமலை விண்ணதிரப் பிளந்தவன் !
காலெடுத்து வள்ளிமனை கால்கடுக்க நடந்தவன் !
சூலெடுத்த சக்திடம் தூயவேலை பெற்றவன் !
கோலெடுத்து ஆண்டியாகிக் கோமகனாய் நின்றவன் !

பழனிமலை மீதில்வளர் பண்டார நாயகா !
பாரமலை மீதில்அருள் பாலகனே தேசிகா !
அழகர்மலைப் பழமருந்தும் சோலைமலை நாயகா
அஞ்சுமுகன் நெஞ்சமதில் வாழுகிற பாலகா !

Koviloor Digital Library

கோபமுடன் காவிகட்டிச் சாமி ஆன பாலகா !
ஆவலுடன் வள்ளிபதம் நாடிவந்த சேவுகா !
தேவமகள் குஞ்சரியை ஆளுகிற சுந்தரா !
பாவமுடன் பாடுகிற பக்தருக்கும் அருளவா !

காவடிகள் ஆடும்போது கூடவரும் சண்முகம் !
பாவடிகள் பாடும்போது தாளம்போடும் உன்முகம் !
பூவடியைச் சரணடைய நாடுகிறோம் சன்னதி !
சேவடியைத் தொழுதவர்க்குச் சேருவது நிம்மதி !

என்றுமுள செந்தமிழில் பாடுவது உன்புகழ் !
என்றுமுள சண்முகனை நாடுவது என்மனம் !
என்றுமுள வடிவேலே எங்களுக்கு வழித்துணை !
என்றுமுளை வண்ணமயில் யாவருக்கும் விழித்துணை !

எண்ண எண்ண விளங்காது இகபரத்தின் ரசகியம் !
எழுத எழுத அடங்காது ஏரகத்தின் அதிசயம் !
உழுது உழுது உன்நாமம் உள்ளமதில் பதிக்கிறேன் !
விழுதுவிட்டு விருட்சமாக வேலவனே ஓடிவா !

ஆறுமுகம் ஆகவந்து ஆதரிக்கும் சண்முகா !
ஆறிரண்டு விழிகளிலே அருள்சுரக்கும் பாலகா !
ஓரெழுத்து மந்திரத்தை ஓதுகிற வித்தகா !
யாரெடுத்து ஓதினாலும் அருளுகிற சத்தியா !

வேலெழுத்து ஆடுகையில் வெற்றியெனக் கூவுவாய் !
கோலெடுத்து ஆடுகையில் கொஞ்சிநடை போடுவாய் !
காலெடுத்து நடந்தவரின் கவலைகளைச் சாடுவாய் !
சூல்கொடுத்து மங்கையர்க்கும் சந்ததியை அருளுவாய் !

நூறுநூறு ஜென்மமாக உந்தனடி தேடினேன் !
வேறுகதி இல்லையென்று வேலவனைப் பாடினேன் !
சேருபோலக் கர்மவினை சூழநானும் வாடினேன் !
ஆறுமுகம் அருளும் என்று அன்புடனே நாடினேன் !

விண்ணைஆளும் சக்தியெலாம் வழங்குவது உன்குணம் !
மண்ணிலுள்ள போகங்களில் மயங்குவது என்குணம் !
கண்ணிணாளே கர்மவினை போக்குகிற வைத்தியா !
என்னாளும் உன்பாதம் நான்பண்ணிய வைத்தவா !

Koviloor Digital Library

பந்தம் என்று வந்ததெல்லாம் பழனியப்பன் ஆகுமோ !
சொந்தமென்று சொன்னதெல்லாம் சுந்தரானாய் ஆகுமோ !
கந்தனென்று சொல்லிச்சொல்லி கதறிடுவாய் நெஞ்சமே !
சொந்தமுடன் வந்துநம்மை ஆதரிப்பான் செல்வனே !

மெல்லிடையாள் வள்ளியிடை அள்ளுகிற பாவலா !
துள்ளுமயில் விட்டுவந்த வள்ளிமனைக் காவலா !
புள்ளிமானைத் தேடிவரப் புதியவழி கண்ட வா !
வள்ளிமானைக் கண்டவுடன் வசமாகி நின்ற வா !

ஆறுமுகன் காதலுக்கு நாரதனின் முன்னுரை !
ஆறுமுகன் மணமுடிக்க ஆனைமுகன் அக்கரை !
யானைமுகன் முன்னிலையில் ஆலிங்கண சோபணம் !
வானகத்து வேலனுக்குக் கானகத்தில் திருமணம் !

இல்லறத்தின் இனிமைகளை எங்களுக்குத் தந்தவன் !
ஏகாந்த நிலைதனிலே எங்களுக்குள் ஒளிர்பவன் !
கள்ளமில்லைக் கபடுஇல்லை காதல்உண்மை வாழ்விலே !
வெள்ளைமனம் போதும் எங்கள் வேலவனைப் பாடவே !

சொல்லச்சொல்லச் சுவைமணக்கும் சுந்தரனின் காவியம் !
வெள்ளமென உள்ளமெலாம் பாய்ந்துவரும் ஓவியம் !
சொல்லெடுத்து கவிமாலை செந்தமிழ் சாற்றினேன் !
வில்லெடுத்தோன் திருமருகா விரைந்து அதைச் சூடவா !

கோவில் மணி ஓசையிலே கொலுவிருக்கும் நாதமாய்
நாவில் வந்து குடியிருக்கும் நல்லதமிழ்த் தெய்வமே !
பூவில் மனம் போலவந்து புன்னகைக்கும் மன்னவா !
சேவல் மயில் வேலுடனே செந்தூரா இங்குவா !

அறிவு என்ற ஆலயத்தை அலங்கரிக்கும் அய்யனே !
அன்புகொண்ட நெஞ்சமதில் தஞ்சமாகும் செல்வமே !
தெளிவுநாடும் யாவருக்கும் தேர்ந்தஞானம் அருளுவாய் !
பரிவுகொண்டு எங்களையும் பண்புடனே ஆளுவாய் !

மண்ணை உண்டு மண்ணில்வாழும் மண்புழுவாய் வாழ்கிறேன் !
உன்னைஎண்ணி உருகிவாழும் உன்னதங்கள் வேண்டினேன் !
அந்தநிலை நீயருள்வாய் ஆறுமுக நாயகா !
சந்தமிகு செந்தமிழை ஆளுகின்ற பாலகா !

மழையாய் வருவாய் முருகா !

ஜெய ஜெய முருகா ஜெய ஜெய முருகா
ஜெய ஜெய முருகா சரணம் ! (ஜெய)

உலகம் உய்ய வரங்கள் கேட்டு
உந்தன் சன்னதி வருகின்றோம் !
கலகம் கயமை இவைகள் நீங்கக்
கந்தா முருகா அருள் புரிவாய் !
விளையும் பூமி மழையால் மகிழ
வெற்றி வேலா அருள்புரிவாய் !
அலையும் மேகம் நிலையாய்ப் பொழிய
ஆறுமுகமே அருள்புரிவாய் ! (ஜெய)

படைவீ டாறின் முதலாம் வீட்டில்
பாங்குடன் ஆளும் வேலவனே !
தடைகள் யாவும் போக்கி நீயும்
தக்க மழையை உடனருள்வாய் !
இடையன் மருகா ! ஈசன் மகனே !
எங்கள் தமிழின் காவலனே !
கடைமடை நிறையக் கனமழை பொழியக்
கந்தா முருகா அருள்புரிவாய் ! (ஜெய)

ஊறும் நீரும் ஓடும் நதியும்
உன்னத மழையின் அருளன்றோ !
பாரில் அறங்கள் தழைத்து நிற்றல்
பண்பாம் மழையின் திறமன்றோ !
ஊரும் உறவும் செழித்தே ஓங்க
உன்னத மழையை நீயருள்வாய் !
மாரில் ஊறும் பாலாய் நீரும்
மண்ணில் ஊற நீ அருள்வாய் ! (ஜெய)

நஞ்சைப் பயிர்கள் விளையும் பூமி
நாறிப்பாலை ஆவதுவோ !
புஞ்சை நிலங்கள் மழையே இன்றிப்
புழுதிக் காடாய் ஆவதுவோ !
நெஞ்சைப் பிளக்கும் துயரில் உழவர்
நித்தம் நெகிழ்ந்து வாடுவதோ !
கெஞ்சிக் கதறிப் பணிந்தோம் முருகா !
கீர்த்தி மழையை உடன் அருள்வாய் ! (ஜெய)

Koviloor Digital Library

ஏரிகுளங்கள் காய்ந்து எங்கும்
எருக்கம் பூக்கள் மலருதடா !
வாரிவழங்கும் தஞ்சை பூமி
வறுமைப் பிணியில் வாடுதடா !
சீறிப் பாய்ந்த காவிரி அன்னை
சிறுத்து ஓடை ஆனதடா !
மாரித்தாயின் மகனே நல்ல
மழையைத் தந்து அருள்புரிவாய் ! (ஜெய)

வைகை பெருக மதுரை மகிழ
வளமாய் மழையை நீயருள்வாய் !
தையற் பெண்ணாய்த் தஞ்சை நிலங்கள்
தழைத்துச் செழிக்க நீயருள்வாய் !
மைவிழி மாதர் மகிழ்ந்தே ஆட
மாநிலம் எங்கும் மழையொழியப்
பொய்கை எல்லாம் புனலாய் வெள்ளம்
பூரித் தோட நீயருள்வாய் ! (ஜெய)

ஏரி கண்மாய் குளங்கள் என்று
எத்தனை எத்தனை வகை செய்தோம் !
யாவும் இன்று நீரே இன்றிப்
பாலைவனமாய் ஆனதடா !
தாயின் மாரில் பாலைத் தேடித்
தவிக்கும் சேய்கள் போலானோம் !
ஆயினும் உந்தன் அருளை நம்பி
அன்புடன் வந்து பணிகின்றோம் ! (ஜெய)

இருவிழி நனைய இருகரம் கூப்பி
ஈசன் மகனைப் பணிகின்றோம் !
அறுமுக மான சரவண பவனே !
அருள்மழை பொழிய உடனருள்வாய் !
இருதுணையோடு எழில் மயிலேறி
ஏரகம் ஆளும் பூரணமே !
ஒருதுணை என்றுன் திருவடி பணிந்தோம்
உன்னத மழையை உடன்அருள்வாய் ! (ஜெய)

Koviloor Digital Library

தென் பரங் குன்றம் சன்னிதி வந்து
உன்பதம் பணிந்து அழுகின்றோம் !
நன்றென நீயும் நல்மழை தந்து
நற்றமிழ் மண்ணைக் காத்திடுவாய் !
குன்றுகள் தோறும் கூர்வேல் ஏந்திக்
குவலயம் காக்கும் பேரழகா !
கன்றுகள் எங்கள் கவலைகள் தீரக்
கனமழை தந்து நீயருள்வாய் ! (ஜெய)

பளபள வென்று வானம் மின்னப்
பருவ மழையை நீயருள்வாய் !
சலசல வென்று நதிகள் பெருகச்
சண்முக நாதா நீயருள்வாய் !
மளமள வென்று நீர்நிலை நிறைய
மங்கள மழையை நீயருள்வாய் !
கலகல வென்று உழவர் மகிழக்
கருணை மழையை நீயருள்வாய் ! (ஜெய)

கரிய மேகம் சூழ வேண்டிக்
கந்தா நானும் கவிபாடக்
கரிய மேகம் சூழல் கண்டு
கந்தன் மயிலும் தானாடக்
கரிய மேகம் மழையை நல்கக்
களிப்பில் உழவர் மகிழ்ந்தாடக்
கரிய மாலின் மருகா கந்தா
கணத்தில் மழையாய் உடன் வருவாய் ! (ஜெய)

Koviloor Digital Library

முருகன் அருள் வேண்டல்

ஆறுமுக மானவடி வேலவனின் புகழ்பாட
ஆனைமுகம் அருள வேண்டும் !
ஐந்தொழில் புரிகின்ற சிவனோடு உமையாளும்
அன்புடன் அருள வேண்டும் !
சீருங்கடல் அலைமீதில் வாழுமுயர் மாலவனும்
சிறப்போடு அருள வேண்டும் !
சிங்கார இலக்குமித் தாயாரும் எனைவாழ்த்திச்
சீரோடு அருள வேண்டும் !
மங்களத் தேவானை மாதரசி வள்ளியும்
மகனெனக் கருள் வேண்டும் !
பங்கயத் தாமரை வாழ்கின்ற வாணியும்
பாங்குடன் அருள வேண்டும் !
எங்களின் குலதெய்வம் எழிலான பகற்சாலன்
இருதுணை யோடு வந்து
பொங்கிடும் பக்தியால் பூக்கின்ற கவிதைக்குப்
புத்தொளி அருள வேண்டும் !

சிவனாரின் விழிசீறச் செஞ்சுடர் வடிவாகச்
சிவபாலன் வந்துதித்தாய் !
சிலகாலம் கார்த்திகைப் பெண்களும் சீராட்டச்
செல்வனாய் வளர்ந்து வந்தாய் !
உமையாளின் கரம்பட்டு ஒன்றான சிவநேசன்
ஓங்கார வடிவு மானாய் !
உண்மையை உணராத நான்முகன் சிரந்தனில்
ஓங்கியே குட்டும் வைத்தாய், !
கனிவோடு பழந்தனைக் கற்பகம் பெற்றிடக்
கருத்திலே எண்ணம் கொண்டு
தனியாக மயிலேறிப் புவனங்கள் நீ சுற்றித்
தண்டோடு நின்று விட்டாய் !
மணியான என்மகன் மனைக்காக்கும் சண்முகன்
மலையிலே நின்று விட்டால்
இனியாரை நாடுவேன்? எனைநாடி ஓடிவா !
எழிலான எந்தன் மகனே !

சுவையாகக் கவிபாடும் ஒளவைக்குச்
சுட்டபழம் அன்று தந்தாய் !
சபையிலே சுடராக நீவந்து அருணகிரி
சங்கடம் தீர்த்து வைத்தாய் !
வசைபாடும் சமணரை வேரோடு சாய்த்திட
வந்தாய் நீ சம்பந் தனாய் !
இசைபட வாழ்ந்திட்ட பட்டிணத் தடிகட்கும்
ஏற்றவழி கண்டு சொன்னாய் !
நரைதிரை வருகின்ற நடுத்தர வயதினில்
நாய்படும் பாடுபட்டு
இறை உனை எண்ணியே ஏங்கினேன் ஏங்கினேன்
என்குறை தீர்த்தல் என்று?
மனையறம் காக்கின்ற மாசிலாத் தங்கம் நீ
மலையிலே நின்றுவிட்டால்
இனியாரை நாடுவேன் ? எனைநாடி ஓடிவா !
எழிலான எந்தன மகனே !

தவஞ்செய்ய மலையிலே தனியாக நிற்கையில்
தண்டமும் கையில் ஏனோ ?
தவக்கோலம் பூண்டபின் தளிரான இருமாதர்
துணைநாடிச் செல்லல் முறையோ ?
தவஞ்செய்யும் வேளையில் அலையான பக்தரால்
தவமது கலைந் திடாதோ?
தவஞ்செய்யும் தனிஇடம் தரணியில் என்மனம்
தம்பிநீ அங்கு வா வா !
தவஞ்செய்யும் குருவுக்கும் தவஞ்செய்யும் குமரிக்கும்
தவமாக வந்த தமிழே !
தவஞ்செய்யும் முனிவர்க்கு முடிவான ஞானத்தைத்
தக்கபடி அருளும் தவமே !
தவஞ்செய்ய மனங்கொண்டு உமையாளின் மைந்தன்நீ
மலைமீது நின்று விட்டால்
இனியாரை நாடுவேன் ? எனைநாடி ஓடிவா !
எழிலான எந்தன் மகனே !

Koviloor Digital Library

இருதாரம் கொண்டு நீ என்றைக்கும் சிக்கலில்
எழிலோடு விளங்கு கின்றாய் !
ஒருதாரம் கொண்டநான் ஓயாது புலம்பியே
உலகினில் வாடு கின்றேன் !
அரிதாரம் பூசாமல் பலவேடம் பூண்டு நான்
அவனியில் உழலுகின்றேன் !
பரிகாரம் பலதேடிப் பலவாறு துயருற்றுப்
பாரினில் வாழு கின்றேன் !
கிரிஏழு வாழ்கின்ற நெடுமாலின் மருகோனே !
கீர்த்தி நான்பெறு வதென்று ?
ஓரேழு பிறவிக்கும் அடங்காத பெருங்கடல்
ஊழினைக் கடப்ப தென்று ?
துணையாக உனைநம்பி வாழ்கின்ற போதுநீ
மலையிலே நின்று விட்டால்
இனியாரை நாடுவேன் ? எனைநாடி ஓடிவா !
எழிலான எந்தன் மகனே !

தாயாரின் துயரிலே சேயாகப் பிறந்தவன்
தன்துயர் சொல்ல வந்தேன் !
மாயாவிப் புலன்களின் மகுடிக்கு ஆடினேன் !
மயக்கங்கள் போக்க வருவாய் !
சீடனாய் வந்துவுன் சீர்பாதம் பணிகிறேன்
சிவகுரு ஆக வருவாய் !
மூடனாய் வாழ்கிறேன் ! முழுமதி தந்து என்
மூர்க்கங்கள் போக்கி வைப்பாய் !
மேலான பக்தியில் மெய்யாக உருகியுன்
மேன்மைகள் பாடும்போது
கோலான தண்டேந்திக் குருவடி வாகி என்
குற்றங்கள் போக்கி அருள்வாய் !
வினைபோக்கும் என்நாதன் வெற்றிதரும் வடிவேலன்
மலைமீது நின்று விட்டால்
இனியாரை நாடுவேன் ? எனைநாடி ஓடிவா
எழிலான எந்தன் மகனே !

Koviloor Digital Library

என்வினை மூட்டையை என் தோளில் ஏற்றிநான்
இயன்றவரை சுமந்து கொண்டு,
கண்களை மூடியே கால்போன போக்கிலே
காலத்தைத் தள்ளு கின்றேன் !
அகவினைச் செயலாலே அகம்பாவம் தலைக்கேற
அழிவினைத் தேடி நானும்
அறிவினைத் தவறான வழிதனில் செலவிட்டு
அல்லலை நாடி நின்றேன் !
உறவினை ஏசியும் உண்மையைச் சாடியும்
உன்மத்தம் கொண்டிருந்தேன் !
ஊழ்வினை மொத்தமாய் எனைவந்து சூழ்கையில்
உன்னடி சரண் புகுந்தேன் !
மனதினில் வந்து என் மருளினைப் போக்காமல்
மலைமீது நின்றுவிட்டால்
இனியாரை நாடுவேன்? எனைநாடி ஓடிவா !
எழிலான எந்தன் மகனே !

கருவினில் தொடங்கிடும் மானுட வாழ்விது
கல்லறை செல்லு மட்டும்,
பொருளினைத் தேடிடும் போகத்தை நாடிடும் !
புகழுக்கு நாயாய் அலையும் !
அருளினைத்தேடாமல் அன்பினை நாடாமல்
ஆணவம் கொண்டு திரியும் !
இருளினைப் போக்கிட ஒளியினை ஏற்றாமல்
இன்னில் தொடர்ந்து வாழும் !
மண்மீது ஆசையும் பொன்மீது மோகமும்
மகிழ்வோடு கொண்டு அலையும் !
தன்பலம் குன்றியே தனிமையில் நிற்கையில்
தன்செயல் பற்றி ஆயும் !
இனிதான உன்னருள் அதைநாடி வருகையில்
மலைமீது நின்றுவிட்டால்
இனியாரை நாடுவேன் ? எனைநாடி ஓடிவா !
எழிலான எந்தன் மகனே !

Koviloor Digital Library

ஈராறு கரங்களில் ஏராள ஆயுதம்
இருக்கின்ற போதுநீயும்
போராடும் உன்மகன் துயரங்கள் போக்காது
பொறுமையாய் இருப்பதேனோ ?
ஈராறு விழிகளில், ஈராறு செவிகளில்
ஒன்றினை மட்டும் நீயும்
தேறாத உன்மகன் திசைதனில் திருப்பிடத்
திருவுளம் கொள்ளும் ஐயா !
கூரான வேல்கொண்டு குன்றங்கள் பிளந்திட்ட
குருபரன் ஆன வேலா !
மாறான சூரர்க்கும் மகிழ்வோடு வரந்தந்து
மயிலாக்கும் ஞான வடிவே !
தேனான தீந்தமிழ்ச் சுவைநாடும் என்மகன்
மலைமீது நின்றுவிட்டால்
இனியாரை நாடுவேன் ? எனைநாடி ஓடிவா !
எழிலான எந்தன் மகனே !

எதிரிகள் யாவரும் என்னுளே இருக்கையில்
எவரோ போராடுவேன் !
புதிரான இவ்வாழ்க்கைப் போராட்டம் தனைவெல்லப்
பொன்னடி சரண் புகுந்தேன் !
கதிராடும் வயல்சூழும் கதிர்காமப் பூமியில்
கனலாக வாழும் அரசே !
கதியென்று உன்பாதம் முடிவாக வருகையில்
கண்மூடி நிற்ப தென்ன?
நதிசூடி வருகின்ற சிவனாரின் தோளேறி
விளையாடும் எங்கள் செல்வா !
விதிதரும் விளைவினை வினை மூலம் நான்பெற்று
விரக்தியில் வாடுகின்றேன் !
கனிவான செல்வமே காவியுடை பூண்டுநீ
மலைமீது நின்றுவிட்டால்
இனியாரை நாடுவேன் ? எனைநாடி ஓடிவா
எழிலான எந்தன் மகனே !

Koviloor Digital Library

காரைக்குடி முத்துப்பட்டணம் அருள்மிகு முத்துமாரி திருப்பதிகம்

நடை :ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் !
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் .

காரைநகர் மாரியின் மீதில் கவி பாடிடக்
கற்பகம் அருள வேண்டும் !
மாரியவள் புகழ்பாட மாலவன் மருகனும்
மகிழ்வோ டருள வேண்டும் !
வேராக விளங்கியிவ் வூராளும் சக்தியை
வித்தகக் கவியில் பாடத்
தாராள மாகவே தமிழ்தந்து சரஸ்வதி
தயவோடு அருள வேண்டும் !
ஊருணிக் கரைவாழும் முத்தாள அம்மனும்
உவந்துமே அருள வேண்டும் !
ஊருக்கு நடுவிலே உலகாளும் கொப்புடை
அம்மனும் அருள வேண்டும்
பாருக்கு வளம்தந்து பயிருக்கு மழைதந்து
பலவாறு அருளும் தாயே !
ஊருக்கு அருள்கின்றஉத்தமி என்னுள்ளும்
உள்ளொளி அருளு வாயே !

பச்சிளம் பாவையாய் பருவத்து மங்கையாய்ப்
பரிவோடு காரை வந்தாய் !
மெச்சியே ஊர்காக்க மேலான தெய்வமாய்
மேன்மையா யாளு கின்றாய் !
கச்சையாய் மஞ்சளைக் கட்டியே பக்தர்கள்
கடுமையாய் விரதம் பூண்டு
இச்சையாம் இல்லறக் கடலினைக் கடந்திட (உன்)
இணையடி நாடு கின்றார் !
எத்தனை உறவுகள் வந்திட்ட போதிலும்
அவையாவும் நீ யாகுமா?
முத்தான மாரியே ! முழுதான சோதியே ! (என்)
முகம்பார்த்துச் சிரிக்கும் சேயே !
சித்தத்தில் உனைப்போற்றிச் சித்திரத் தமிழாலே
சிலிர்ப்போடு பாடு கின்றேன் !
மொத்தத்தில் உன் பாதம் முழுமையாய்ப் பணிகின்றேன் !
முக்தியை அருளு வாயே !

Koviloor Digital Library

கையிலே கங்கணம் ! கருத்திலே உன் முகம் !
கடல்போல பக்தர் வெள்ளம் !
காரையம் பதியிலே மாரிக்குப் பாற்குடம்
காட்டாறு போல வெள்ளம் !
மெய்யிலே சந்தனம் பூசியே பக்தர்கள்
மெல்லவே வந்த போதும்,
மேலான உன்பாதம் காண்கின்றபோதினில்
புயலாக வந்து மோதும் !
பொய்யிலை – புளுகிலை – புதிருக்கு விடையிலை
புதுமைகள் அங்கு பாரீர் !
பூரித்த அழகுடன் புன்னகை எழிலுடன்
பூ மகள் வடிவம் பாரீர் !
கையறு நிலைகொண்டு, கலங்கிடும் பக்தரின்
கலங்கரை விளக்கம் நீயே !
கையேந்தி உன் பாதம் கண்ணீரால் நனைக்கின்றேன் (என்)
காயத்தை ஆற்று தாயே !

பத்தினிப் பெண்டிரின் பாற்குடம் பலகோடி
பாங்குடன் வந்து சேரும் !
பறவையாய் மாறிய காவடிகள் கண்டுமே
பரவசம் எங்கும் சேரும் !
அக்கினிப் பூவிலே அன்னையுன் பிள்ளைகள்
ஆவேசம் கொண்டு ஆடும் !
அலங்காரக் காவடி அழகான முளைப்பாரி
அன்னையுன் பாதம் நாடும் !
மத்தள வாத்தியம் மங்கள நாயனம்
மகிழ்வோடு சிந்து பாடும் !
மாதரசி உன்னாமம் மகிழ்வோடு கூவிட
மங்களம் எங்கும் சேரும் !
சித்திரப் பூவிழி சிரித்திட ஒருகணம்
சிறுவனைப் பாரு தாயே !
சித்தத்தில் மலர்கின்றசிங்கார மாரியே
சிவகதி அருளு வாயே !

Koviloor Digital Library

அந்தணப் பெண்ணாக அன்றைக்கு வந்தவள்
அனைவர்க்கும் தாயும் ஆனாய் !
அற்பர்க்கும் அற்பராய் வாழ்பவர் வந்தாலும்
அவர்கட்கும் அருளை ஈந்தாய் !
சந்தனச் சாந்தினில் மணமாக வந்துநீ
சந்ததி தழைக்க வைத்தாய் !
சவ்வாது குங்குமம் சாற்றிட்ட பெண்மைக்குச்
சரியான துணையும் தந்தாய் !
வந்தனம் செய்திட்ட வாலிபப் பிள்ளைக்கு
வளமான வாழ்வு தந்தாய் !
வருகின்றபக்தரின் நோய்களைத் தீர்த்து நீ
வலிமையை வழங்கு கின்றாய் !
சந்ததம் உன்பாதம் பணிகிறேன் பணிகிறேன்
சாயுச்ய பதவி தந்து,
எந்தனைக் காத்திடு ! எந்தனைக் காத்திடு
என்னுளே வாழும் தாயே !

காற்றாக உடல்மாறும் ! கனலாக அருளேறும்
காயமும் மறந்து போகும் !
கனவான உலகிலே மனம்சென்று விளையாடும் !
கவலைகள் மாய்ந்து போகும் !
தோற்றத்தில் உன்எழில் ஒருகணம் தோன்றிடும்
துரியத்தில் ஜோதி ஒளிரும் !
துயரங்கள் இல்லாத தூயதோர் மனநிலை
தொடர்ந்து மேஎன்னை ஆளும் !
மாற்றத்தை வேண்டாமல் மனமதில் லயித்திட
மாதரசி உன்னை வேண்ட
மறுமையை ஒளியாக்கும் வாழ்வினைத் தருவதாய்
மகிழ்வோடு சொல்லி அருள்வாய் !
சீற்றமிகு விதிவசம் சிக்கியே சுழல்கிறேன்
சீக்கிரம் வந்து காப்பாய் !
செஞ்சுடர் வடிவான சிவகாளித் தென்றலே
சிறுவனை என்று மீட்பாய் ?

Koviloor Digital Library

செல்வங்கள் பலவாறு சேர்க்கின்றபோதிலே
சிலருக்கும் மகிழ்வு தோன்றும் !
சிறப்பான பதவிகள் வருகின்றபோதிலே
சிலருக்கு மகிழ்வு தோன்றும் !
பிள்ளைகள் உறவுகள் பலப்படும் போதிலே
பலருக்கு மகிழ்வு தோன்றும் !
பெருமைகள் விருதுகள் பெருகின்றபோதிலே
பலருக்கு மகிழ்வு தோன்றும் !
இருவிழி மூடியே உன் பாதம் நினைப்போர்க்கு
எப்போதும் மகிழ்வு தோன்றும் !
ஒருமுறைஉன்முகம் மனதிலே காண்போர்க்கு
உத்தம வாழ்வு தோன்றும் !
மறுமுறைமறுமுறைஉன்னையே மனதிலே
மகிழ்வோடு துதிப்ப வர்க்கு
மறுமையைக் கடக்கின்றமகத்தான பேராற்றல்
மனதிலே என்றும் தோன்றும் !

காற்றான பிராணனும் காற்றோடு கலந்திடும்
காயமும் மண்ணில் சேரும் !
கனவுகள் காண்கின்றசித்தமும் வானிலே
காணாமல் கரைந்து போகும் !
நேற்றுவரை உடன்வந்த உறவுகள் அப்போது
நீர்த்துமே ஓய்ந்து போகும் !
நெகிழ்கின்றஎன்பக்தி அதுமட்டும் நெருப்பாகி
நின்பாதம் வந்து சேரும் !
காற்றுளே உயிராகிக் காயத்துள் உணர்வாகிக்
காக்கின்றஎன்றன் தாயே !
கருத்திலே தெளிவினைத் தந்தெனைக் காத்திடு
கனலாக வாழும் தாயே !
மாற்றாளின் பிள்ளையாய் மகனெனை எண்ணிநீ
மதிப்பதும் முறையும் தானோ ?
மடிதனில் இடந்தரும் தாயாக நீ மாறி
மகனெனைக் காரும் தாயே !

Koviloor Digital Library

இல்லறம் காக்கின்றஎன்போன்றஏழைக்கு
எப்போதும் அருளு கின்றாய் !
சொல்லறம் காக்கின்றதூயவர் வாக்கினில்
சோதியாய்ச் சுடரு கின்றாய் !
நல்லறம் பேணிடும் யாவரும் வாழ்ந்திட
நலமோடு அருளு கின்றாய் !
கள்ளமில் லாதவர் மனத்திலே சென்றுநீ
களிப்போடு துயிலு கின்றாய் !
நல்லவர் படுதுயர் போக்கிடும் நாயகி
நானிலம் போற்றும் உன்னை !
வல்லவர் மனத்திலே வந்து நீ நிற்பதால்
வறுமைகள் தீரும் உண்மை !
அல்லது போகவும் நல்லது சேரவும்
அன்னை நீ அருள வேண்டும் !
மல்லிகைச் சோலையின் தென்றலாய் வந்து நீ
மாநிலம் காக்க வேண்டும் !

பொருளுக்கு ஏங்கியும், புகழுக்கு ஏங்கியும்
போகத்தில் வாழ்ந்து விட்டேன் !
அருளுக்கு ஏங்கியும் அன்புக்கு ஏங்கியும்
அன்னையுன் பாதம் தொட்டேன் !
கருவுக்குள் வாழ்ந்திடும் மழலைக்கும் அன்னத்தைக்
கருத்துடன் ஊட்டும் தாயே !
உறவுக்கு ஏங்கிடும் உன்பிள்ளை என்னையும்
உணர்வோடு காரும் தாயே !
அறிவுக்கு விளங்காத அவலங்கள் எனைச்சூழ்ந்து
அல்லலில் ஆழ்த்தும் போது
அன்னைக்கும் மேலாக வந்தெனைக் காக்கின்ற
அன்பான சக்தி வடிவே !
பிரிவுக்கு அழுதிடும் பெண்ணிடம், மணநாளில்
பெற்றவள் புத்தி சொல்வாள் (உன்)
அருளுக்கு அழுதிடும் பிள்ளையென் துயருக்கு
அன்னை நீ என்ன சொல்வாய்?

Koviloor Digital Library

குருபரன் தமிழுக்கு உருகிடும் கொற்றவை (என்)
குலம்காக்க வந்த ஜோதி !
குன்றுதோ அடிடும் குமரப்பன் என்மகன்
குலம்காத்து நின்றஜோதி !
கருவளர் காலங்கள் தொட்டெமைக் காத்திடும்
கற்பகம் உற்றஜோதி !
கடனென்று எண்ணாமல் எமையாளும் ஐயனார்
கலங்கரை விளக்க ஜோதி !
திருவரங் கத்திலே துயில்கின்றதேசிகன்
திருவருள் கின்றஜோதி !
தில்லையம் பதியிலே தினமாடும் நடராசன்
திகழ்கின்றயோக ஜோதி !
அருளோடு வழிகாட்டி எமையாளும் சற்குரு
அன்பான ஞான ஜோதி !
அதுபோல நீயெந்தன் அகந்தனில் விளக்காகி
அன்புடன் ஆளு தாயி !

கடல்சூழும் இம்மண்ணில் கருமேகம் சூழட்டும்
கனமழை பொழிய அருள்வாய் !
அருள்சூழும் இம்மண்ணில் இருள்சூழ வொட்டாமல்
அவலங்கள் போக்கி அருள்வாய் !
மடல்சூழும் நீர்நிலை மலர்ந்திடும் ஞாயிறால்
மனம்மலரும் உந்தன் அருளால் !
மருள்சூழும் மானுடம் மமதைகள் நீங்கிடும்
மாதரசி உந்தன் அருளால் !
கடைசென்று வாங்கிடும் பொருளல்ல நிம்மதி !
கருத்தினில் விளங்க வைப்பாய் !
கடனென்று வாழ்வது வாழ்வல்ல என்பதைக்
கடையர்க்கும் புரிய வைப்பாய் !
நடைபோட்டு வருகிறபக்தர்கள் யாவர்க்கும்
நற்கதி தந்து காப்பாய் !
நம்பியுன் திருவடி பணிகின்றயாவர்க்கும்
நலமோடு வளமும் சேர்ப்பாய் !

Koviloor Digital Library

முனீஸ்வரன் தோத்திரம்

ஓம் நமச்சிவாய ஓம் ! ஓம் நமச்சிவாய !
ஓம் நமச்சிவாய ஓம் ! ஓம் நமச்சிவாய !

அர்த்த ஜாம வேளையில் அகிலம் தூங்கும் காலையில்
உக்கிரமாய் வருகிறார் உலக நாதன் தளபதி !
கச்சை கட்டி வருகிறார் ! கையில் தண்டம் ஏந்தியே !
கர்ச்ச னையும் புரிகிறார் கடலைப்போல பொங்கியே !

உச்சரிக்கும் மந்திரம் ஓம் கார நாதமாம் !
மெச்சு கிற வாத்தியம் மேலைக்கடல் இடிகளாம் !
அர்ச்சனைகள் புரிவது ஆடி அடங்கும் தலங்களாம் !
இத்தனைக்கும் அதிபதி கால தேவன் தளபதி !

சங்கு நாதசே கண்டி தாரை பறை வாத்தியம்
மங்கள மாய் முழங்கிட மகிமை யோடு வருகிறார் !
தொங்கும் மீசை கத்தியாம் ! துடிக்கும் கண்ணில் சத்தியாம்
இங்கி தமாய் நெற்றியில் ஒளிரும் நீறு வெண்மையாய் !

Koviloor Digital Library
துட்டமிகு தேவதை துடுக்கு செய்யும் யட்சிகள்
அத்தனையும் அடக்கவே ஆவேசம் கொண்டு வருகிறார் !
கட்டளைகள் போடுவார் ! கடுமையாகச் சாடுவார் !
அத்தனைக்கும் அதிபதி ! ஆனவர்தான் நம்பதி !

காளி ஆடும் வேளையில் கூடத் தாளம் போடுவார் !
கால காலன் பூசையில் தாளமோடு ஆடுவார் !
சாமமான வேளையில் கோணங் கியாய் மாறுவார் !
சேம நலம் கூறிடச் சித்தர் கோலம் சூடுவார் !

இரவு காலை இடைவெளி இருளும் ஒளியும் சேர்வெளி
புரவி மீது ஏறியே புயலைப் போல வருகிறார் !
அரியும் அரன் அயனுடன் அன்னை மூவர் போற்றிட
புரியும் கடமை விளங்கவே புன்னகையும் புரிகிறார் !

அஞ்செழுத் தை ஓதிடும் அனைவருக்கும் அடிமையாம் !
நெஞ்ச மதில் ஈசனை நினைத்த வர்க்கும் அடிமையாம் !
தஞ்சமென ஈசனைப் பணிபவர்க்கும் அடிமையாம் !
வஞ்ச மின்றி அவர்களை ஆதரிக்கும் வள்ளலாம் !

தில்லை நாதன் சேவடி தினமும் நாடும் எந்தனின்
தொல்லை போக்க வருபவர் ! தொடர்ந்து என்னைக் காப்பவர் !
பிள்ளை களாம் எங்களைப் பெருமையோடு காக்கவே
எல்லைக் காவல் தெய்வமாய் என்றும் வாழ்ந்து அருள்பவர் !

என்று வந்த போதிலும் எந்தன் மனம் விழித்திடும் !
நன்று ஓதும் மந்திரம் எந்தன் செவி கேட்டிடும் !
அந்தப் புரவிக் குளம்பொலி எந்தன் இல்லம் கடக்கையில்
சிந்தை யாவும் ஈசனின் சேவடியில் நிலைத்திடும் !

Koviloor Digital Library

கொங்கு நாச்சி அம்மன்

கொங்கு நாச்சி அம்மன் புகழ் பாடிடுவோம் ! – நம்
குலம் விளங்க அவளருளை நாடிடுவோம் !
மங்களங்கள் அருளுகின்ற நாச்சியம்மா ! எங்கள்
மனைவிளங்க வந்துபுரி ஆட்சியம்மா ! (கொங்கு)

பிள்ளையார் பட்டிஊரின் எல்லையிலே – வெகு
பெருமையோடு காவல் செய்யும் நல்லவளே !
பிள்ளை நாங்கள் உந்தனடி சரணடைந்தோம் ! நீ
நல்லபடி வந்ததெமக்கு நலமருள்வாய் ! (கொங்கு)

சுயம்புவாக வடிவம் கொண்ட நாயகியே ! நல்ல
சுந்தரமாய் பவனிவரும் பேரொளியே !
இயம்புகின்றேன் உந்தன் புகழ் தமிழினிலே ! நீ
எழுந்து வந்து நடம்புரிவாய் மனதினிலே ! (கொங்கு)

கொங்குநாடு விட்டுப்பாண்டி நாடு வந்தாய் ! எங்கள்
குலம்விளங்கக் கோயில் கொண்டு ஆளுகின்றாய் !
தஞ்சமென்று உந்தன்தாள்கள் சரண்புகுந்தோம் ! எங்கள்
நெஞ்சில் என்றும் நிலையாக விளங்கிடுவாய் ! (கொங்கு)

Koviloor Digital Library

ஸ்ரீஸாயிபாபாவின் பதினொரு உபதேச பொன்மொழிகள்

1. ஷீரடி ஸ்தலத்தை எவன் மிதிக்கின்றானோ, அவனுடைய துன்பம் ஒரு முடிவை அடைந்து சௌகரியத்தை அடைகின்றான்.
2. துவாரகா மாயியை அடைந்த மாத்திரத்தில் பெரும் துன்பத்திற்கு உள்ளானவர்களும் மிகுதியான சந்தோஷத்தை அடைகிறார்கள்.
3. இவ்வுலகை விட்ட பிறகும் சர்வ சக்தியுடன் வேலை செய்வேன்.
4. என்னுடைய மசூதி என் பக்தர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களையும், புத்திமதிகளையும் கொடுக்கும்..
5. என்னுடைய பூத உடல் என் மசூதியலிருந்து பேசும்.
6. என்னுடைய மசூதியிலிருந்து கொண்டே நான் மகிவும் சுறுசுறுப்பாகவும் தீவிரமாகவும் இருப்பேன்.
7. என்னிடம் வருபவர்களுக்கும் என்னை தஞ்சம் அடைபவர்–களுக்கும், என் உபதேசத்திற்காக என்னிடம் தீவிர நம்பிக்கை உள்ளவர்களுக்கும் நான் எப்பொழுதும் உயிருடன் இருக்கின்றேன்.
8. நீ என்னை அடைந்தால் நான் உன்னைக் கடாக்ஷிக்கிறேன்.
9. நீ என் பேரில் உன் பளுவைச் சுமத்தினால் நான் நிச்சயமாக அதைத் தாங்குவேன்.
10. நீ என் உபதேசத்திற்காகவும் உதவிக்காகவும் என்னை அடைந்தால் அவைகளை உடனே நான் உனக்கு கொடுப்பேன்.
11. என்னுடைய பக்தகர்ளுடைய வீட்டில் ஒருபோதும் தேவை என்பதே இருக்காது.

32241

Koviloor Digital Library

யாமிருக்க பயமேன் ?



ஓம்சாயி! ஸ்ரீசாயி!

ஜெய ஜெய சாயி!

Koviloor Digital Library

சற்குரு துணை

அருளமுதம்



SRI SHIRDI PUBLICATIONS
23, Karpagavinayagar Colony
K.Pudur, MADURAI - 7
Ph: 0452-2566842